www.padippakam.com


இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණොට්ටම්

வெளியீடு: 37 | 01 ஆவணி 1997 | விலை: ரூபா 7.00



# ஒக்டோபரில் சர்வஜன வாக்கெடுப்பு?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்து அரசு பதவிக்கு வந்து மூன்று வருடங்களாகி விட்டன. 1995 ம் ஆண்டு அரசு ஓர் தீர்வுத் திட்டத்தை வெளியிட்டு, பின்னர் நீண்ட நாட்களாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் இத்தீர்வுத் திட்டம் விவாதிக்கப்பட்டது.

பின்னர் அதுவும் முடிந்து விட்டதாகவும், நவம்பர் மாதத்துக்கு முன்பாக அரசியல்சாசன நகல் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாகவும் இப்பொழுது பேராசிரியர் பீரிஸ் கூறிவருகின்றார்.

பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்குமா? ஐ.தே.கட்சி ஆதரவளிக்குமா? என்ற கேள்விகள் விஸ்வரூபம் எடுப்பதால் பாராளுமன்றத்தில் அரசியல் சாசன நகலை சமர்ப்பிக்கு முன்னர், அரசாங்கம் அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு விட ஆலோசித்து வருவதாக அரச வட்டாரங்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

ஆனால் அரசியல் சாசன நகலில் என்ன இருக்கிறது என்பது இதுவரை யாருக்கும் தெரியாத மூடுமந்திரமாகவே உள்ளது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கும் அரசுக்கும் இடையில் எந்த விதமான உடன்பாடும் ஏற்பட்ட மாதிரித் தெரியவில்லை.



ஆனால் அரசாங்கம் இது தொடர்பாக அவ்வப்பொழுது கூட்டணிப் பிரமுகர்களுடன் பேசுவதாகவும், அவர்களுக்கு இதுதொடர்பாக பல விடயங்கள் தெரிந்திருக்குமெனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

அரசினால் பச்சை விளக்கு காட்டப்பட்ட பின்னரே கூட்டணிக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் அலகு தொடர்பான இணக்கம் ஏற்பட்டதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள ஏனைய தமிழ் கட்சிகள் நிர்ப்பந்திக்கப்படும் எனவும் அறியப்படுகின்றது.

அதேசமயம், தீர்வு காணப்படாத விடயங்கள் இன்னும் உண்டெனவும் கூறும் கூட்டணி, தம்பிமார் தற்போதைய தீர்வுத் திட்டத்தைக் குழப்பக் கூடாது எனவும், ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளனர். மொத்தத்தில் எத்தகைய தீர்வு ஆலோசனைகளுக்காக சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறப் போகின்றது என்பது இன்றுவரை தெரியவில்லை.

வடகிழக்கு இணைப்பு நிலைக்குமா? முஸ்லிம் மக்களுக்கு தனிமாகாணத் தீர்வை ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் அங்கீகரிக்குமா? எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதாக அரசு கூறி வருகின்றது. அப்படியாயின் சேருவாவில, கந்தளாய், மணலாறு போன்ற இடங்களின் நிலைமை என்ன? அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்பட்டுள்ளதா? நிதி, சட்டம் ஒழுங்கு, காணிப் பங்கீடு போன்ற விடயங்கள் முழுமையாகப் பகிரப்பட்டுள்ளதா? அரசாங்கம் நிறைவேற்றுக் குழு முறை என்ற வடிவத்திலேயே மாகாண அரசுகளை உருவாக்க இருப்பதாகக் கூறுகின்றது. இது சரியானதா? இது மாகாணசபைகளை நெருக்கடிக்குள்ளாக்குமா? இல்லையேல், ஆரோக்கியமாக செயற்பட அனுமதிக்குமா?

இப்படியான பல கேள்விகளுக்கு எந்தத் தமிழ் கட்சிக்கும் பதிலே தெரியாது. ஆனாலும், தீர்வுத் திட்டம் ஒன்று வரப் போகின்றது, அதை ஏற்பதா விடுவதா என்ற சர்வஜன வாக்கெடுப்பும் நடைபெறப் போகின்றது.

புலிகளின் ஆரவாரங்கள் ஒருபுறமிருக்க, சகல தமிழ்க் கட்சிகளும் இணைந்து அரசுடன் பேச்சு நடத்தும் சூழ்நிலை இல்லை என்பதே யதார்த்தமான தாய் உள்ளது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளும் கையறுநிலையில் இருப்பதாகவே தோன்றுகின்றது.

அதேசமயம், சர்வஜன வாக்கெடுப்பை நோக்கமாகக் கொண்டு, அதற்கு தயார்ப்படுத்து முகமாகவே ஆளுங்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு இரண்டு நாள் கருத்தரங்கு மாத்தறையில் நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் விரும்பினார்களோ இல்லையோ வடகிழக்கில் 75 சதவீதமான மக்களும், ஏனைய பகுதிகளில் 60 வீதத்திற்கு மேற்பட்ட மக்களும் இதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வடகிழக்கில் இராணுவமும், மத்தியில் அரசு இயந்திரமும் கையில் இருக்கும்பொழுது, சர்வஜன வாக்கெடுப்பில் இலகுவாக வென்றுவிடலாம் என்பதே அரசின் அபிப்பிராயம் எனத் தெரிகிறது.

சர்வஜன வாக்கெடுப்பில் ஆளுங்கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், ஐ.தே.கட்சி பாராளுமன்றத்தில் ஆதரவு கொடுக்க நிர்ப்பந்திக்கப்படலாம். இல்லையேல் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற அரசு மீண்டும் பாரளுமன்றத் தேர்தல்களையும் நடத்தலாம்.

மொத்தத்தில் இவ்வாண்டு கடைசிப் பகுதியிலும், அடுத்த ஆண்டு முற்பகுதியிலும் பல தேர்தல்கள் நடக்கலாம் என்றே நம்பப்படுகின்றது.



## உள்ளே....


இனிய தமிழ் மக்களே!
செயலாளர் நாயகம் மடல் 03
மனித உறவுகளும் பாஸ் கெடுபிடிகளும்
தி. சிறீதரன் 04
மன்னார் மக்களின் தொடர் அவலம்
இரட்ணசிங்கம் குமரேஸ் 05
தமிழ்க் கட்சிகளுக்கு ஓர் அன்பான.... 05
இந்திய இலங்கை ஒப்பந்தம்
எஸ். கந்தையா 06
கடிதங்கள் 08
குறுக்கெழுத்துப் போட்டி-33 09
போகிற போக்கில் 10
ஒரு புதிய தொற்று நோய் 10
திராய்கேணி கிராமத்தில்....
இரா. துரைரத்தினம் 11
அவுஸ்திரேலிய தூதுவருடன் சந்திப்பு 11
கடல்வழிப் பாதையா தரைவழிப் பாதையா
சாணக்கியன் கட்டுரை 12
பிராந்திய குழு முறையே.... 12


படிப்பகம்

# கண்ணோட்டம்

## தமிழ்க்கட்சிகள் சிந்திக்க வேண்டும்

ஐக்கியத்தைப் பற்றிப் பேசாத இயக்கம் இல்லை. கட்சியும் இல்லை. ஆனால் மேடைகளிலும், கூட்டங்களிலும்தான் இந்த ஐக்கியம் பேசப்படுகின்றது.

அரசைப் பொறுத்தவரை, வாய் ஓயாமல் ஒரு பல்லவியைப் பாடிவருகிறது. "நாம் தீர்வுத் திட்டத்தை வைத்துவிட்டோம்; யார் எதிர்த்தாலும் நாம் அதனை நிறைவேற்றுவோம்" இதுதான் அரசின் பல்லவி. ஆனால், தமிழ்க்கட்சிகளோ இதனை எவ்வாறு அணுகுவது, எவ்வாறு செயற்பட்டால் அதிகபட்ச உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற சிந்தனையே இன்றி, அவரவர் விரும்பியவாறு தனித்தனி ஓட்டங்கள். சிலர் முஸ்லிம்களுடன் பேசுவது, சிலர் ஐ.தே.க.வுடன் பேசுவது. சிலர் அரசாங்கத்துடன் பேசுவது.... இப்படியே சீரழிந்து போகும் நிலைதான் நாளாந்தம் நடந்து வருகின்றது.

சகல கட்சிகளும் பொதுவான ஓர் நிலைப்பாட்டுக்கு வர வேண்டும், ஒரே குரலில் பேச வேண்டும். இப்பிரச்சினையைக் கையாள்வதற்கான மூலோபாயம், தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். ஒரு தமிழ் Delegation ஐ உருவாக்க வேண்டும், இவர்கள்தான் அரசுடன் பேசவேண்டும் என்ற இணக்கத்துக்கு வருவதற்கே இவர்களுக்கு சிரமமாக உள்ளது.

திம்பு பேச்சுவார்த்தையில் சகல கட்சிகளுக்கும் ஓர் உடன்பாடு இருந்தது. ஆனால் அச்சூழ்நிலை கூட இன்றில்லை. பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் போராடி பல ஆயிரம் உயிர்களை இழந்த பின்னும், இன்றும் வரட்டுத்தனமான சித்தாந்தத்திலேயே பலர் இருப்பது வேதனைக்குரியது.

கொழும்பில் கைது, விமானநிலையக் கைது, அகதிப் பிரச்சினை, சாப்பாட்டுப் பிரச்சினை.... இவற்றுக்கான அறிக்கைகள் விட்டதுடன் பிரச்சினைகள் முடிந்துவிட்டதாகவே பலர் கருதுகின்றனர். ஆனால், முதலாவதும் முக்கியமானதுமான இனப் பிரச்சினைத் தீர்வுக்கு, அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணராமல் இருப்பதானது, தமிழரின் தலையெழுத்து என்றே சிந்திக்கத் தூண்டுகின்றது.

சட்டம் ஒழுங்கு, காணி காணிப் பங்கீடு, நிதி, நிறைவேற்றுக் குழு முறை (Executive Committee System) எனப் பல விடயங்கள் முழுமையாக விவாதிக்கப்படவே இல்லை. இந்த நிலையில், அரசாங்கம் தான் விரும்பியதைச் செய்துகொண்டுபோக, தமிழ்க் கட்சிகள் பார்வையாளராகவே இருக்கின்றன.

ஓர் அரசியல் சாசன நகலை உருவாக்குவதற்கு முதல் தமிழ்க் கட்சிகளுடன் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்ற சிந்தனை அரசுக்கும் இல்லை. அதேசமயம், முழுமையான ஓர் பேச்சுவார்த்தையை அரசுடன் நடத்த வேண்டும் என்ற திட்டம் தமிழ்க் கட்சிகளுக்கும் இல்லை. இதனைப் பற்றி யாரும் கருத்துத் தெரிவித்தால், 'நல்ல ஆலோசனை' என்பதுடன் விடயம் முடிந்து விடுகின்றது.

தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்கவென பாராளுமன்றம் சென்றவர்கள், இதனை ஏன் சற்று ஆழமாக சிந்திக்கக் கூடாது? தனிநாடு, விடுதலை என்று போராட்டம் தொடங்கி, இன்று குறைந்தபட்சம் அடிப்படை உரிமைகளையாவது வென்றெடுக்க நாம் உடன்பட முடியாமல் போனால், நிச்சயமாக நம்மில் ஏதோ கோளாறு இருக்கிறது. தமிழ்த் தலைவர்கள் இதைப் புரிந்துகொள்ளாமல் போனால் துரதிர்ஷ்டம்தான்!

இது தேர்தல் உடன்பாடா? இல்லையே. எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஓர் தேவைக்காக நாம் ஏன் ஒன்றுபடக் கூடாது? அது நிறைவேறியபின்னர் நீங்கள் தனித்துப் போட்டியிட்டால் என்ன, கூட்டாகப் போட்டியிட்டால் என்ன யார் வேண்டாமென்கிறார்கள்? எமது இழப்புகளுக்கு ஓர் அர்த்தம்தேவை. எமது தியாகங்களுக்கு ஓர் அர்த்தம் தேவை. இவை எதுவும் விழலுக்கு இறைத்த நீராகப் போய்விடக் கூடாது.

அரசாங்கம் தமிழரில் அக்கறை கொண்டு ஒன்றையும் அள்ளிக் கொடுத்துவிடாது. நாம்தான் தேவையானவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு எங்கள் மத்தியில் ஒற்றுமையும், கூட்டு முயற்சியும் தேவை. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் எடுப்பதுபோல காலங்கடந்தபின் வருந்திப் பயனில்லை. எதனை எப்படிச் செய்யவேண்டும் என்பதனை நாம் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். நாம் எவ்வாறு செயற்பட்டால் அரசாங்கத்திடம் அதிகளவு பேரம் பேசமுடியும் என்பதை சிந்திக்க வேண்டும்.

வட-கிழக்கில் எமது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய, கௌரவமாக வாழக்கூடிய, தங்களது தேவைகளைத் தாங்களே நிறைவேற்றக் கூடியவாறு தீர்வுகள் அமைய வேண்டும். எமது பிராந்தியத்தைச் செழிப்பாக மாற்றக்கூடிய, எமது பூமியில் வளமான வாழ்வு வாழக்கூடிய பிராந்தியமாக மாற்றக்கூடிய அதிகாரங்கள் எமக்கு வேண்டும். எமது கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழிற்சாலைகளை நாங்களே திட்டமிட்டு உருவாக்கும் அதிகாரங்கள் வேண்டும். எமது காடு, எமது கடல், எமது இயற்கை வளங்களை நாமே பாதுகாக்கும், பராமரிக்கும் அதிகாரங்கள் வேண்டும். எமது மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றை வளர்த்தெடுத்துக் கொள்வதற்கான அதிகாரம் வேண்டும்.

மறுபக்கத்தில், எமது மக்களின் முன்னேற்றத்தை, எமது பிராந்தியத்தின் வளர்ச்சியை மறுதலிக்கும் மத்திய அரசின் அதிகாரங்களை அகற்ற வேண்டும். மத்திக்கோர் ஆட்சிமுறை, பிராந்தியங்களுக்கோர் ஆட்சிமுறை என்பதை அகற்றவேண்டும்.

இவ்வாறு பல விடயங்களை நாம் வென்றெடுக்க வேண்டியுள்ளது. எனவே நாம் பிரிந்து நின்று, எம்மைப் பலவீனமாக்கி, பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்குப் பலியாகப் போகின்றோமா? அல்லது கூட்டாக இணைந்து எமது உரிமைகளை வென்றெடுக்கப் போகின்றோமா? இவ்வுறுதிச் சந்தர்ப்பத்திலாவது தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். எமது சமுதாயத்தை நாமே அழித்தவர்களாய் இருக்க வேண்டாம். சிந்தியுங்கள்.




## தோழர் ஈசனுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி!





## தோழர் ஈசன் (சதகேஸ்வரன்)

12 வருடங்களுக்கு மேலாக முல்லைத்தீவு, கிளிநொச்சி இறுதியாக வவுனியா ஆகிய பகுதிகளில் மக்களுக்காக அர்ப்பணத்துடன் உழைத்தார். சோம்பியிருத்தல், தயக்கம், அச்சம் என்பன தோழர் ஈசனிடம் காணக்கிடைக்காத குணங்கள். விடாமுயற்சி, கடும் உழைப்பு என்பனவே அவரின் சாதாரண இயல்பாக இருந்தது. தனது 27 வயதில் மரணத்தைத் தழுவும்வரை அவர் ஒரு இயந்திரம் போலவே செயற்பட்டார்.

பிடிவாதமும், முரட்டுச் சுபாவமுமுள்ள தோழர் ஈசன், தன் மனதில் உண்மையான மனிதாபிமானத்தைத் தேக்கி வைத்திருந்தார். எப்போதும் உணர்ச்சிவசப்பட்டோ, சுயபச்சாதாபத்தை வெளிப்படுத்தியோ தோழர் ஈசன் வேலை செய்யவில்லை. கட்சியின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளை அல்லது தான்பட்ட கஷ்டங்களைக் கூட எப்போதும் வாய்திறந்து கூறியதில்லை.

மிக இக்கட்டான நிலவரங்களை, கஷ்டங்களை கட்சி எதிர்நோக்கிய போது, மனந்தளரா உறுதியோடு கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே அவரது சிந்தனையாக இருந்தது. கஷ்டங்கள் வருகிறபோது எது சௌகரியப்படுகிறதோ அங்கு தாவிக்கொள்பவர்களையே நாம் பார்த்து வருகிற இக்காலத்தில், தோழர் ஈசன் மனித நற்குணங்களை விசுவாசிக்கிறவர்கள் போற்றத்தக்க எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்.

சதகேஸ்வரன் என்னும் இயற்பெயரைக் கொண்ட தோழர் ஈசனுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**


29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-2398

22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-22724

மன்னார். ☎ 023-2370

Post Bag: 1041, Madras-17, India.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

P.Fach: 100206, 44002 Dortmund, Germany.

54, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. ☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 2258

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

P.Fach: 506, Bern-17, Switzerland.


www.padippakam.com

படிப்பகம்

## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

அரசுக்கும்,புலிகளுக்கும் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டபோதும் வவுனியா-யாழ் பாதையைத் திறப்பதற்கான யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. "செய் அல்லது செத்து மடி" என்ற பெயரில் தீடீர் தாக்குதல்கள், அவற்றை முறியடிக்க அரச தரப்புத் தாக்குதல்கள்



என யுத்தம் நீண்டுகொண்டே போகின்றது.

மறுபுறத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவானது தனது கலந்துரையாடல்களை ஓர் முடிவுக்குக் கொண்டுவந்து விட்டதாக அதன் தலைவர் பேராசிரியர் பீரிஸ் அறிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவில் பல ஆக்கபூர்வமான யோசனைகள் முன்வைக்கப்பட்டதாகவும், அவை எல்லாவற்றையும் தான் கிரகித்துக் கொண்டுள்ளதாகவும், ஐ.தே.கட்சி முன்வைத்த பல ஆலோசனைகளை தாம் கவனத்தில் கொண்டுள்ளதாகவும், இவையும் நகல் அரசியல் சாசனத்தில் இணைக்கப்படுமெனவும் அறிவித்துள்ளார். அத்துடன் தேவையேற்பட்டால் மாத்திரமே இனித் தெரிவுக் குழு கூட்டப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

## அன்பிற்கினிய தமிழ் மக்களே!

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுக்க வேண்டும்; அதற்கு சகல கட்சிகளுடனும் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்ற காரணத்திற்காகவே தீர்வுத் திட்ட ஆலோசனைகள் தெரிவுக்குழுவில் முன்வைக்கப்பட்டதுடன், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கவே இத் தெரிவுக்குழுவும் உருவாக்கப்பட்டது.

ஆனால் தெரிவுக்குழுவில் ஒரு விடயத்தில்தானும் இணக்கப்பாடு ஏற்படுத்தப்படவில்லை. பல விடயங்கள் பேசப்பட்டன. முதலில், பிரச்சினைக்குரிய விடயங்கள், பிரச்சினையற்ற விடயங்கள் எனத் தீர்வுத் திட்டம் இரண்டு வகைப்படுத்தப்பட்டது. இதில் பிரச்சினையற்ற விடயங்களே விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. இப்பிரச்சினையற்ற விடயங்களில்கூட இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

தெரிவுக் குழுவில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துப்படி, பல விடயங்கள் பேசப்பட்டபோதும் எதற்கும் இறுதி முடிவு எடுக்கப்படாமலேயே கலந்துரையாடல் தொடர்ந்தது. பிரச்சினைக்குரிய விடயம் என்பது தெரிவுக்குழுவில் பேசப்படவேயில்லை. இதில் முக்கியமாக சட்டம் ஒழுங்கு, காணி காணிப்பங்கீடு, மாகாண சபைக் கலைப்பு போன்ற பல விடயங்களும் அலகு சம்பந்தமான விடயமும் கவனத்தில் எடுக்கப்படவேயில்லை.

ஆனால் தெரிவுக் குழு விவாதங்கள் நிறுத்தப்பட்டு நகல் அரசியல் யாப்பை உருவாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இந் நகல் அரசியல் யாப்பு எவ்வாறு தமிழ் அபிலாசைகளை பூர்த்தி செய்யப் போகின்றது என்ற விடயத்தில் ஒருவருக்கும் வெளிச்சமில்லை.

'பேராசிரியர் பீரிஸ் சரியாகத்தான் செய்வார், ஆகவே பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பதுதான் சிறந்தது' என்ற முணுமுணுப்பும் சில அரசியல்வாதிகள் மத்தியில் இல்லாமலில்லை.

**அரசு தனது வசதிக்கேற்ப தனித்தனி இயக்கங்கள், கட்சிகளுடன் பேசுவது என்பதை விடுத்து, ஓர் பிரதிநிதித்துவக் குழுவுடன் அரசு பேசவேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். எல்லா அமைப்புக்களையும் இணைத்த பிரதிநிதித்துவக்குழு ஒன்று அதற்காக உருவாக்கப்படவேண்டும். இவற்றை எம்மால் செய்ய முடிந்தால்தான் இதுவரை தமிழ் மக்கள் செய்த தியாகங்களுக்கு ஓர் அர்த்தம் இருக்கும்.**

ஆனால் ஜூன் 29ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் ஆங்கிலப் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டி ஒன்று, நகல் யாப்பு எப்படி இருக்கும் என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டத்தை ஐதாக்குவது என்ற நோக்கில் ஐ.தே. கட்சியால் வைக்கப்பட்ட யோசனைகளை சிறந்தவைகள் என அவர் ஏற்றுக்கொண்டதானது, சிங்கள இனவாதக்குழுக்களின் கருத்துக்களுக்கு உட்பட்டே பேராசிரியர் நகல் யாப்பைத் தயாரிப்பார் என்பதை தெளிவாக்குகின்றது.




20 வருடமாக தமது உரிமைகளுக்காகப் போராடிவரும் ஓர் இனத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு கடைப்பிடிக்கும் வழிமுறைகள் மிகவும் வேடிக்கையானது. முதலில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல சட்சிகள் மத்தியிலும் ஓர் இணக்கப்பாடு வர வேண்டுமெனக்கூறியது. இப்போது, 'பேசியது போதும், நாம் ஓர் நகல் யாப்பைத் தயாரிக்கப் போகிறோம்' என்கின்றார்கள்.

இத் தீர்வுத் திட்டத்தைத் திருத்த ஐந்து தமிழ்க் கட்சிகளும் சில ஆலோசனைகளை முன்வைத்தன. ஆனால் அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டதாக இல்லை. இல்லையேல், இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என தெரிவுக் குழுவில் வற்புறுத்தியதாகவும் தெரியவில்லை.

மொத்தத்தில், அமைச்சர் பீரிஸ் அவர்கள் தமது விருப்புக்கேற்ற ஒரு நகல் யாப்பை வெளியிடுவார்; அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே இன்றுள்ள சூழ்நிலை.

இந்த புதிய யாப்பு வெளியிடு முன்னர் அரசுடன் பேச வேண்டும். இதுவரை விவாதிக்கப்படாத விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டும், ஏற்கனவே விவாதிக்கப்பட்ட விடயங்களில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை அறிய வேண்டும் என்ற தேவையோ ஆதங்கமோ தமிழ் கட்சிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அரசுடன் பேச வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளும் தமிழ்க் கட்சிகள், அதற்கு முன்னர் தமக்குள் ஐக்கியப்பட்டு, (இப்பொழுது TULF வெளியில் உள்ளது) என்ன விடயங்களைப் பேசுவது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

அரசு தனது வசதிக்கேற்ப தனித்தனி இயக்கங்கள், கட்சிகளுடன் பேசுவது என்பதை விடுத்து, ஓர் பிரதிநிதித்துவக் குழுவுடன் அரசு பேசவேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். எல்லா அமைப்புக்களையும் இணைத்த பிரதிநிதித்துவக்குழு ஒன்று அதற்காக உருவாக்கப்பட வேண்டும்.

இவற்றை எம்மால் செய்ய முடிந்தால்தான் இதுவரை தமிழ் மக்கள் செய்த தியாகங்களுக்கு ஓர் அர்த்தம் இருக்கும்.

தற்பொழுது 'தமிழ் இயக்கங்களுக்குள் ஒற்றுமையில்லை; இவர்களுக்குள் பல கருத்து வேறுபாடுகள் உண்டு' என அரசாங்கம் இன்னும் ஓர் பிரசாரத்தை தொடங்கியுள்ளது. உண்மையில் தமிழ்க் கட்சிகளை ஒதுக்கிவிட்டு அரசு, தான்விரும்பும் தீர்வுத்திட்டத்தை திணிப்பதற்காகவே இம்முயற்சியினை மேற்கொண்டு வருகின்றது.

அதிகாரப்பகிர்வு தொடர்பாக தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரையில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் கிடையாது. இன்னும்சொல்லப் போனால், ஐந்து கட்சிகளும் அரசியல் தீர்வுத்திட்டத்தை திருத்துவதற்கென பல ஆலோசனைகளை ஒன்றாகவே கூறியுள்ளன. அதிகாரப் பகிர்வுக்கான அலகு தொடர்பாக சில கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால்அவை பேசித் தீர்க்கப்பட முடியாதனவல்ல.

எனவே நாம் ஐக்கியப்பட்டு கொடுத்த, தீர்வுத்திட்டத்தைத் திருத்துவதற்கான ஆலோசனைகளை எம்முடன் விவாதிக்க விரும்பாத அரசு, எமக்குள் கருத்தொற்றுமை இல்லை என பிரசாரம் செய்யத் தொடங்குவது, தாம் விரும்பியவற்றைத் திணிப்பதற்கே என்பதை நாம் மறந்துபோகக் கூடாது.

அரசும், ஐ.தே.க.வும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வரு முன்னரே, அலகு தொடர்பான தமிழ்க்கட்சிகளின் முடிவைக் கேட்கின்றார்கள். அதாவது, தமிழ்க் கட்சிகள் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்துபேசி ஓர் முடிவுக்கு வர வேண்டுமாம். அப்படி வந்தாலும், அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது பற்றி அவர்கள் சொல்லத் தயாராக இல்லை.

ஏனெனில் அலகு என்ற பிரச்சினைக்குரிய விடயம் பற்றி பேச விட்டால், தமிழ், முஸ்லிம் கட்சிகள் வாழ்க்கை பூராவும் பேசிக் கொண்டே இருப்பார்கள். அதுவரை தமக்குச் சிக்கல் இல்லை என்பதே ஆளும் கட்சியினதும், எதிர்க் கட்சியினதும் நோக்கம். இதனைப் புரியாத ஒருசில தமிழ்க் கட்சிகளும், அலகைப் பற்றி ஒரு முடிவுக்கு வர வேண்டும் என அங்கலாய்ப்பதும் வேடிக்கையான விடயம்.

றெலோவைப் பொறுத்தவரை, அலகு என்பது அடிப்படையான விடயம், எனவே அதில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புகளும் இருக்க முடியாது.... எனவே எமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும் என்கிறார்கள். இதன்மூலம் பேச்சுவார்த்தைகள், தீர்வுத்திட்டம் குழம்பிப் போனாலும் அவர்களுக்கு அதனைப் பற்றிக் கவலையில்லை.

**"அலகு என்ற பிரச்சினைக்குரிய விடயம் பற்றி பேச விட்டால், தமிழ், முஸ்லிம் கட்சிகள் வாழ்க்கை பூராவும் பேசிக் கொண்டே இருப்பார்கள். அதுவரை தமக்குச் சிக்கல் இல்லை என்பதே ஆளும் கட்சியினதும், எதிர்க் கட்சியினதும் நோக்கம்."**

கூட்டணி, மு.காங்கிரசுடன்பேசி முடிவுக்கே வந்துவிட்டது. அதாவது, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கோர் தனி மாகாணத்தை உருவாக்குவது.... முஸ்லிம் காங்கிரஸ் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வேறு விடயம்.

மொத்தத்தில், பேச்சுவார்த்தை மேடையை எப்படிப் பாவிக்கவேண்டும் என்ற மூலோபாயமோ, அதற்கான தந்திரோபாயங்களோ இல்லாமல், அடித்தால் அங்குமிங்கும் உருளும் பந்துபோல ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்பதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் நிலைப்பாடாகும்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகவே போராடி வருகின்றார்கள் என்ற அடிப்படையில், பிரச்சினையை உண்மையாகவே தீர்க்க விரும்பின்,

1. அரசும், தமிழ்க் கட்சிகளும் பேசுவதற்கான ஓர் தளம் உருவாக்கப்படல் வேண்டும்.
2. தமிழ்க் கட்சிகள், அரசுடனும் தேவையேற்படின் ஏனையவர்களுடனும் பேசுவதற்கான ஓர் குழுவை (Tamil Deligation) உருவாக்க வேண்டும். இவர்கள் பேச்சுவார்த்தைக்கான மூலோபாயம், தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்பட வேண்டும்.
4. இது வகுக்கப்பட்டால், முன்னர் எதனைப் பேசுவது பின்னர் எதனைப் பேசுவது என்பது உட்பட, யார் என்ன பேச வேண்டும், எப்பொழுது பேச வேண்டும் போன்ற விடயங்களைத் தீர்மானிப்பது இலகுவாக இருக்கும். இதன்மூலம் இன்று எழும் பல பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்பதுடன், அரசு எமக்கு எதிராகச் செய்யும் பிரசாரங்களையும் முறியடிக்கலாம்.

எனவே, 'புலிகளைப் பலவீனப்படுத்தியதன் பின்னர் நாம் விரும்பியதைத் திணித்துவிடலாம்....ஏனைய கட்சிகள் எமது தயவிலேயே வாழ்கின்றன' என்ற அரசின் எண்ணப் போக்கில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின், மேற்கண்ட வழிமுறைகள் மிகவும் முக்கியமானவையாகும்.

அன்புடன்,
உங்கள் சுரேஷ்.

---

இலக்கியம் முதலிய கருத்துக்கள் எல்லாம் அரசியல், கலாசார, பொருளாதார, சமூக அளவில் நம்மை ஆள்பவர்கள் கட்டமைக்கும் கருத்துக்கள். அவர்கள் தாங்கள் உருவாக்கும் சமூகத்தில் நம்மைத் திணித்து வேலை வாங்கக் கூடிய முறையில் சில கருத்துக்களை உருவாக்கி நமக்குள் பதித்து வைத்து விடுகிறார்கள். நமது மனம் என்பதுகூட, அவர்களால் கட்டமைக்கப்படுவது. வரலாறு, கலாசாரம் ஆகியவற்றைப் போலவே மொழி என்பதும் கட்டமைக்கப்படுவது என்று சொல்கிறார்கள். இதன் அடிப்படையில் இலக்கியத்தைப் பிரதி என்று அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். மூலப்பிரதி என்று ஒன்றும் கிடையாது; படிப்பவர்களுக்கு ஏற்றபடி பிரதி மாற்றமடைந்தபடி இருக்கும்; படைப்பாளிக்கு முக்கியத்துவம் இல்லை. ஒருவன் ஏதாவது எழுதுகிறான் என்றால் இந்த கலாசாரமானது, இந்த சமூகமானது அவன் வழியாக தன்னை எழுதிக் கொள்கிறது என்றுதான் அர்த்தம் என்று சொல்கிறார்கள்.

- கோவை ஞானி

www.padippakam.com



# மனித உறவுகளும் பாஸ் கெடுபிடிகளும்



ரி. சிறீதரன்

கொழும்பில் பாஸ் நடைமுறை தமிழ் மக்களை பொலிஸின் அடிமைகளாக மாற்றியுள்ளது. பொலிஸும் தாம் தமிழர்களின் எஜமானர்கள் என்ற எண்ணத்துடன்தான் செயற்படுகின்றார்கள். அத்தோடு அச்சுறுத்தலையும், பதட்டத்தையும், பீதியையும் உருவாக்கும் விதத்தில் நடந்துகொள்கிறார்கள்.

தமிழர்கள் கட்டாயம் பாஸ்பெற வேண்டுமென்ற நடைமுறை பல பொலிஸ்காரர்களை லஞ்சப் பேர் வழிகளாக மாற்றியுள்ளன. சமூக விரோதசக்திகளும் இதனைப் பயன்படுத்திக் கொண்டு, தம்மைப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு வீதிச் சோதனை, மிரட்டல், வழிப்பறிக் கொள்ளை என இறங்கியுள்ளனர்.

வீதிச் சோதனைச் சாவடிகளில் தமிழ்ப்பெயர் கொண்டவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் அடையாள அட்டையிலுள்ள பிறந்த இடம் என்னும் பகுதியை வைத்தே கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகளுக்கும் இந்த நடைமுறைகள் விதிவிலக்கல்ல.



வவுனியாவிலுள்ள 16,500 க்கு மேற்பட்ட மக்கள் வைக்கப்பட்டிருக்கும் முகாம்களும் தடுப்பு முகாம்கள் போலவே செயற்படுகின்றன.

அரசு இனஐக்கியம், அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், மறுபுறம் தமிழ் மக்களை அந்நியப்படுத்தும் நடவடிக்கைகள் வேகமாக நடைபெறுகின்றன. நாம் இந்த நாட்டில் ஏன் பிறந்தோம் என்று நொந்துபோகும் அளவுக்கு வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

பொலிஸ்துறை மனிதர்களைக் கொண்டுதான் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகம் வருமளவுக்கு தமிழர்கள் மீதான அவர்களது கெடுபிடிகள் அமைந்திருக்கின்றன. உலகில் வேறெங்கும் அனுபவிக்காத துன்பதுயரங்களை தமிழ் மக்கள் தமது சொந்த நாட்டில் அனுபவிக்கிறார்கள் என்பது துரதிர்ஷ்டவசமான உண்மையாகும்.

### கொழும்பில் பொலிஸ் பதிவு நடைமுறை

பதிவதற்கு பொலிஸ் நிலையம் சென்றால், அவர்களிடமுள்ள ஒரேயொரு விண்ணப்பப் படிவத்தையும், எமது அடையாள அட்டையையும் போட்டோ பிரதி எடுத்துச் செல்ல வேண்டும்.

பிரதான குடியிருப்பாளர் எனப்படுபவர், தனது வீட்டில் குடியிருக்கப் போகிறவர்களுடன் பொலிஸ் நிலையத்தில் பிரசன்னமாக இருக்க வேண்டும்.

எல்லா விபரங்களைச் சொன்னாலும், உடனடியாக விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு பாஸ் வழங்கப்பட மாட்டாது. நாம் எதையாவது நீட்டுவோமா என்று காத்துக் கிடப்பார்கள்.

ஒருவாறு படிவத்தைப் பூர்த்தி செய்து, அதை எடுத்துச் சென்று வீட்டு உரிமையாளருக்கு ஒன்று குடியிருப்பாளருக்கு ஒன்று என போட்டோ பிரதிகளை எடுத்துக் கொண்டு, மூலப்பிரதியை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு வர அன்றைய நாள் போய்விடும்.

யாராவது உறவினர்கள், விருந்தினர்கள் வந்தால் வரவேற்பது மனிதப் பண்பாடு. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில், வீட்டுக்கு யாராவது வந்துவிட்டால் நிம்மதி இருக்காது.

உடனடியாக அவர்கள், வந்திருக்கிறவர்களையும் அழைத்துக் கொண்டு பொலிஸ்நிலையம் சென்றாக வேண்டும். சென்றவுடன் காரியம் முடிந்துவிடும் என்று கூறமுடியாது. அவர்கள் விரும்பிய நேரம் விசாரணையை முடித்து, விடும் வரை நிம்மதி இருக்காது.

பிரதான குடியிருப்பாளரையும் போதாக்குறைக்கு கூட அழைத்துச் செல்ல வேண்டும். அவர்தான் தம்மிடம் முறையிட வேண்டுமென்று பொலிஸ் கூறுகின்றது. வீட்டுக்காரரை அழைத்து வர முடியாத தற்காலிக குடியிருப்பாளர் துரதிர்ஷ்டக்காரராகத்தான் இருப்பார்.

தற்போது தமிழர்களைக் குடியிருத்துவதாக இருந்தால் கிராமசேவகரின் அத்தாட்சியையும் கோருகிறார்கள். கிராம சேவகரோ வாக்காளர் பதிவேட்டில் பெயர் இருக்கிறதா இல்லையா என்பதை உறுதிப்படுத்துமாறு கோருகிறார்.

தமிழர்களை வீட்டில் குடியிருத்தியமைக்காக வீட்டுக்காரர் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்ட பயமுறுத்தப்பட்ட சம்பவங்களும் உண்டு. இதனால் அந்த வீட்டில் மாத்திரமல்லாமல் சுற்றாடலிலும் அமைதி குலைகிறது.

விடுதி உரிமையாளர்கள் பொலிஸை சந்தோஷப்படுத்தி தொந்தரவு வராமல் பார்த்துக் கொண்டாலும், விடுதிகளில் பாய்ந்து ஆட்களைக் கைது செய்வதாகப் பயமுறுத்தி, கிடைப்பதைச் சுருட்டிக் கொள்வதும் வழமையாகி விட்டது.

### அலையும் கடற்கரைத் தாழங்காய் வாழ்வு

வவுனியாவிலிருந்து நாளாந்த அலுவலாக கொழும்பு வருவோர் பொலிஸில் சென்று பதிவது சாத்தியமே இல்லை. நேர்முகப் பரீட்சை, கடவுச் சீட்டுப் பெறுதல் போன்ற வேலைகளுக்காக வருவோர், பொலிஸில் பதிவதானால் அந்த அலுவலைத்தான் பார்க்க முடியும்.

வவுனியாவில் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட நிரந்தரப் பாஸுடன் வருபவர்கள் கூட இங்கு பதிந்தாக வேண்டும். திருமலை, மட்டக்களப்பிலிருந்து அடையாள அட்டையுடன் வருபவர்களுக்கும் இது விதிவிலக்கல்ல. யாழ்ப்பாணத்திலிருந்து உரிய அனுமதி பெற்று அனுமதிச் சீட்டுடன் வருபவர்களும் அவ்வாறே.

வடகிழக்கிலிருந்து வருபவர்கள் சொந்தஊரில் பாதுகாப்பு அதிகாரிகளிடம், தாங்கள் கொழும்பில் தங்கப் போகும் உறவினர்களின் விலாசங்களைக் கொடுத்திருப்பார்கள். சிலவேளைகளில் பல காரணங்களால் தங்கமுடியாமல் போகும். குறிப்பிட்ட விலாசத்தில் ஏன் ஆள் வரவில்லை? என்றும் உருட்டப்படுகிறார்கள்.

வேறொரு இடத்தில் சென்று தங்க அனுமதி கேட்கிறவர்பாடும் திண்டாட்டம்தான். இருக்கப்போகும் இடத்தில் பொலிஸ் அனுமதி பெறப் போனால், எங்கு தங்குவதாக வந்தீர்களோ அந்தப் பொலிஸிடம் செல்லுமாறு கூறுவார்கள். அங்கு போனால், இருக்கப்போகும் பொலிஸ் நிலையத்திற்குப் போகுமாறு சொல்வார்கள். அங்கும் இங்கும் அலைவதில் நாள் போகும். இடையில் அகப்பட்டால் உள்ளே போகவேண்டியதுதான். இருக்குமிடம் விலாசம் மாறுகிறவர்களுக்கும் இதே கதிதான்.

### அடையாளத்தைத் தேடி....

ஒரேயொரு விடயத்தைப் பொலிஸார் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள் – பீதியின் நிழலில் வாழும் தமிழ் மக்களிடம் பணம் பிடுங்குவது இலகுவானது என்பதை. இந்த பாஸ் நடைமுறை கொழும்பிலும் அதன் சுற்றாடலிலும் பல பொலிஸ்காரர்களைப் பெரும் பணக்காரர்களாக்கியிருக்கிறது.

வயோதிபர்கள், குழந்தைகள், நோயாளிகள் என்று எவரும் விதிவிலக்கில்லாமல் மிக முட்டாள்தனமான மனிதாபிமானமற்ற முறையில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

பஸ் வழிமறித்துச் சோதனையிடப்படும்போது, தமிழ்ப் பெயரிலுள்ள அடையாள அட்டைகள் தனிப்படுத்தப்பட்டு அவர்களிடம் பொலிஸ் பதிவு கேட்கப்படுகிறது. மற்றைய பயணிகளின் வித்தியாசமான பார்வைகளைச் சந்தித்தபடி அவர் கடைசி ஆளாகவே பஸ்ஸில் ஏறமுடிகிறது.

பொட்டு, வேஷ்டி, மீசை, பெயர் என்பன மனிதர்களைச் சந்தேகிப்பதற்கான விடயங்களாக மாறிவிட்டன. இந்தக் கெடுபிடிகளை பிக்பொக்கற் பேர்வழிகள், வழிப்பறிக்காரர்கள் தமக்குச் சாதகமாக பயன்படுத்துகிறார்கள்.

அதிகாலை ரயிலில் வந்து இறங்கும் வடகிழக்கு பிரயாணிகள் கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் தமது அடையாள அட்டைகளையும் 'பேர்ஸ்'களையும் பறிகொடுத்துவிட்டு அழுதுநிற்பது நாளாந்த நிகழ்ச்சி. ரயில்களிலும் புலனாய்வுத் துறையினர் என்று முடிச்சுமாறிகள் உலவுகிறார்கள்.

### கைதாகி விடுதலையாகும் கஷ்டம் எதற்கான தண்டனை?

யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி வருபவர்கள் மகசின், வீரவில, பண்டாரவளை, அநுராதபுரம் என்று அலைய வேண்டியிருக்கிறது. அலைவதற்கும் உரிய ஆவணங்கள், தங்க இருப்பிடம் என்பவற்றில் பல சிரமங்கள்.

விடுதலை செய்யப்படுபவர்கள், அநுராதபுரம் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு பிணையிலோ பிணையில்லாமலோ விடுவிக்கப்படுகிறார்கள். மொழி தெரியாத, இடம் வலம் புரியாத அந்த இடத்திற்கு வரும் தமிழர்கள், தாம் தமிழர்கள் என்பதற்குரிய அடையாளங்களை அழித்துவிட்டுத்தான் அநுராதபுரம் நீதிமன்ற வளவில் நிற்கிறார்கள்.

ஒரே சங்கிலியில் பிணைக்கப்பட்ட நிலையில் 20–25 பேர் ஒன்றாக சிறைச்சாலை வாகனத்தில் இருந்து இறக்கப்படும் காட்சியை அவர்களது உறவினர்கள் பார்க்கிறார்கள்.

சிலருக்குத் தம் பிள்ளைகளைக் கொண்டுவருகிறார்கள் என்று அறிந்தாலும் யாழ்ப்பாணத்திலிருந்து உடனடியாக வருவது சாத்தியம் இல்லை. இதனால் பிணை செலுத்தப்பட முடியாமல் மீண்டும் சிறையில் காலம்தள்ள வேண்டிய நிலை. 2000ரூபா முதல் 25000 ரூபா வரையிலான பிணைப்பணத்தைச் செலுத்த முடியாத வறிய குடும்பத்தினர் கதி? நிரபராதிகள் என்று தெரிந்தாலும் நிம்மதியடைய முடியாத வாழ்க்கை.!

பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் நிற்பதற்கு இடம் இல்லாவிட்டாலும், விடுதிகளிலும் வீதிகளிலும் இப்படி ஆயிரம் தொல்லை இருந்தாலும், நின்று தவணைக்கும் சமுகமளித்துவிட்டே செல்லவேண்டும்.

இந்த நீதிமன்ற கடமைகளை அநுராதபுரத்திலிருந்து திருகோணமலை அல்லது வவுனியாவுக்கு மாற்றினால்கூட சிரமங்கள் ஓரளவு குறையும்.

அதேபோல்,வடகிழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தெளிவான தகவல் அறிக்கை இருக்க வேண்டும்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட பலர் இருக்கிறார்களா? இல்லையா? எங்கு இருக்கிறார்கள்? போன்ற தகவல்கள் பெறுவதில் பெரிய சிரமம் நிலவுகிறது.

### வவுனியா தடைமுகாம்களும் பாஸ் நடைமுறைகளும்

வவுனியாவிலுள்ள 16,500 க்கு மேற்பட்ட மக்கள் வைக்கப்பட்டிருக்கும் முகாம்களும் தடுப்பு முகாம்கள் போலவே செயற்படுகின்றன. ஜூன் 10ம் திகதிக்குப் பின்னரான பதட்ட சூழலிலும் இவர்கள் அவ்வாறுதான் வாழ்கிறார்கள்.



பெருந்தொகையானோர் கைதுசெய்யப்படுவதும் பல மாதங்கள் எங்கிருக்கிறார் என்று தெரியாமல் பெற்றோர் அலைந்தபின், திடீரென ஒருநாள் அவர் குற்றமற்றவர் எனக் கண்டுபிடித்து அநுராதபுரத்தில் வைத்து விடுவிக்கப்படுவதும், விடுதலையிலும் சந்தோஷம் கொள்ள முடியாமல் அவர்கள் அலமலந்து போவதும்.... இவையெல்லாம் எதற்கான தண்டனைகள்?

இவர்களுக்கு உணவுக்காகக் கொடுக்கப்பட்டு வந்த பணக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டுவிட்டது. முன்னர் பெரியவர்களுக்கு 50 ரூபாவும், சிறுவர்களுக்கு 30 ரூபாவும் வழங்கப்பட்டது. தற்போது உலர் உணவு வழங்கப்படுகிறது. ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு சுமார் 1200 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களே கிடைக்கும். சமைப்பதற்கு இடம், சுகாதாரம் போன்ற பல பிரச்சினைகள்....

இங்குள்ளவர்களில் பலர், அவர்களது விருப்பத்திற்கு மாறாக சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சொந்த இடங்களில் போய்த் தங்கும் சூழ்நிலை இருந்தால், அவர்கள் இங்கிருக்கப் போவதில்லை என்ற சாதாரண உண்மை கூட நெருக்குகிறவர்களுக்குப் புரிந்ததாய் இல்லை. நிரந்தர முகாம்களில் தங்க விரும்புவோரும் இருக்கிறார்கள். அத்தியாவசிய கடமைகளுக்காக கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய பலரும் மாதக் கணக்கில் தவம் இருக்கிறார்கள்.

வைத்தியம், பிள்ளைகளின் திருமணம், வெளிநாட்டுப் பயணம், உயர் கல்வி, எங்காவது கொடூரங்கள் குறைந்த வெளியிடங்களில் குடியேறிவிட, வயோதிப காலத்தை பிள்ளைகளுடன் கழிக்க..... இவ்வாறு பல திறத்தினர்.

இவர்கள், தாம் முகாமை விட்டு வெளியேறுவதற்கு சேகரிக்க வேண்டிய அத்தனை ஆவணங்களையும் திரட்டி, பெரிய பெரிய ஃபைல்களை வைத்துக்கொண்டு திரிகிறார்கள் – வேலை தேடி அலையும் இளைஞர்கள் போல.

### பாஸ் நடைமுறைகள்

வவுனியா நிரந்தரப் பாஸ், மூன்று மாத பாஸ் உள்ளவர்கள் மாத்திரமே வவுனியா ரயில் நிலையத்திற்கோ, பஸ் நிலையத்திற்கோ சென்று டிக்கற் பெற்று பிரயாணம் செய்ய முடியும். மற்றவர்களுக்கு முடியாது.

கொழும்பில் இருந்து வவுனியா வரும் ஒருவர் ரயில் நிலையத்திலோ அல்லது ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியிலோ ஒருநாள் பாஸ் பெற வேண்டும். மறுநாள் அதனை ஒரு வாரமாக நீடித்துக் கொள்ள முடியும். அதன்பின்னர் அவர்கள் வவுனியாவில் நிற்க முடியாது. நீண்டகாலம் வெளிநாட்டில் இருந்துவிட்டு வரும் வவுனியா பிரஜைக்கும் இதே விதிதான்.

ஒரு மாத பாஸ், மூன்று மாத பாஸ் படம் ஒட்டப்பட்ட பாஸ் வைத்திருப்பவர்கள் வவுனியாவில் மாத்திரமே அதனைப் பயன்படுத்த முடியும். வவுனியாவுக்கு வெளியே இது செல்லாது.


கொழும்புக்குச் செல்வதாக இருந்தால், கொழும்புப் பதிவு உள்ள ஒருவரின் பாஸ் பிரதி வேண்டும். நிரந்தரப் பாஸ் உள்ள ஒருவர் பிணை நிற்க வேண்டும். (பணம் கொடுத்தால் எந்தப் பாஸையும் பெறமுடியும். அது வேறு.)

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இவ்வாறான இடங்களுக் ☞

www.padippakam.com

புதிய கண்ணோட்டம்

# மன்னார் மக்களின் தொடர் அவலம்



இரட்ணசிங்கம் குமரேஸ்
பிராந்தியச் செயலாளர்
மன்னார்.



சில மாதங்களுக்கு முன் நடத்தப்பட்ட 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் காரணமாக மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள பெரும்பாலான மக்கள் மன்னார் நகரப்பகுதிக்குள் இடம் பெயர்ந்து எங்கு செல்வதென்று தெரியாமல் இறுதியாக உயிலங்குளம் இராயப்பர் தேவாலயத்தில் தங்கியுள்ளனர்.

கிராமத்திலுள்ள மக்கள் தேவாலயஞ் சென்று வழிபட முடியாமல் போய்விட்டது ஒருபுறமிருக்க, தேவாலயத்தில் தங்கியுள்ள மக்கள் இடவசதியின்றியும் மற்றும் அடிப்படை வசதிகளின்றியும் பெரும் அவதிகளோடுதான் உள்ளார்கள். மலசலம் கழிப்பதற்கேகூட சில மைல் தூரம் அவர்கள் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அப்போதும் குளக்கரைகளையும் பாதைகளையும் தவிர வேறு மலசலகூட வசதிகளின்மையால் பெரும் சுகாதாரக் கேடு நிலவும் அபாயத்துடனேயே இம்மக்கள் வாழ்கிறார்கள்.

'எடிபல' நடைபெற்ற சில மாதங்களிலேயே வவுனியா–கிளிநொச்சி நெடும்பாதையில் தொடங்கப்பட்ட 'ஜயசிக்குறு' அப்பகுதிகளில் ஏற்கனவே இடம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்த மக்களை மீண்டும் இடம்பெயர வைத்துள்ளது. இந்த மக்கள் இப்போது உயிலங்குளம், எருக்கலம்பிட்டி, பேசாலை போன்ற பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஐக்கியநாடுகள் அகதிகள் கிறிஸ்தவ தொண்டு நிறுவனம் மற்றும் அரச நிர்வாகத்தினர் வந்து பார்வையிட்டாலும், இன்னும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இவர்களில் அநேகமானோர் யாழ்ப்பாணம் செல்லும் மன நிலையிலேயே இருக்கின்றனர். தற்போது பேசாலையியிருந்து காங்கேசன்துறை கப்பல் சேவை நடைபெறுவதால் சிலர் யாழ்ப்பாணம் சென்றுகொண்டுமிருக்கின்றனர்.

மன்னார்–வவுனியா பாதை திறக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்றாலும், ஏற்கனவே இந்த நடவடிக்கையின்போது பாதிக்கப்பட்ட குஞ்சுக்குளக் கிராமமானது எவ்விதத் தொடர்புமின்றி துண்டிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் உணவிற்கே கஷ்டப்படும் நிலைமை உருவாகியுள்ளது. இராணுவத்தினரிடம் சென்று, உணவு தரும்படியும் இல்லாவிட்டால் சுட்டுக்கொன்று விடும்படியும் கேட்டபிறகு இராணுவத்தினர் அவர்களுக்கு ஒருவேளை சமைத்த உணவு போட்டார்கள். அதன்பின் மன்னார் ஆயர் அம்மக்களுக்கு, எமிலியான்பிள்ளை குருவானவர் மூலம் உணவுப் பொருட்கள் வழங்கினார்.

மடுறோட், இசைமலைத்தாழ்வு, கற்கடந்தகுளம் போன்ற பிரதான வீதியோரக் கிராம மக்கள் தங்கள் குடியிருப்புக்களை இழந்து ஆற்றங்கரை, பரியாரி கண்டல், ஜீவநகர் போன்ற இடங்களுக்குச் சென்றுள்ளனர். அம்மக்களுக்கும் எந்தவித அடிப்படைத் தேவைகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இதோபோல் பரப்பான்கண்டல், நொச்சிக்குளம், உயிலங்குளம், நீலாச்சேனை, கல்விகட்டக்காடு போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோதுகூட, நிர்வாகம் வந்து கவனிக்காதது தொடர்பாக அம்மக்கள் அரசஅதிபருக்கு மகஜர் ஒன்றும் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. இருந்தும் பதில் கிடைக்காத ஏமாற்றத்தில் அம்மக்கள் உள்ளனர். 'அகதிக் காலமும் அகதி வாழ்வும்' என தலைவிதியை நொந்துகொள்கின்றனர்.

இப்பகுதி மக்கள் மன்னார் நகருக்குள் அத்தியாவசிய தேவை மற்றும் வைத்திய சிகிச்சைக்காக வரவேண்டுமாயின், பல மணித்தியாலங்கள் வயல்வெளிகளில் காத்திருந்து பலவிதச் சோதனைக் கெடுபிடிகளுக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். மன்னார் வந்து திரும்புவதற்கு போதுமான பஸ்சேவை இல்லாததால், சுமைகளுடன் நீண்ட கியூ வரிசையில் மன்னார் பஸ்நிலையத்தில் தவங்கிடப்பதைக் காணமுடியும். சிறுவர், சிறுமியர், வயோதிபர்கள் மன்னார் வெயிலில் இவ்வாறு பஸ்சுக்குக் காத்திருந்து மயங்கி விழுந்தசந்தர்ப்பங்களும் உண்டு.

அரசியல் அனாதைகளாய்ப் போன இந்த மன்னார் மாவட்ட மக்களின் அவலங்களைப் போக்க அரசும், அதிகாரிகளும் கண்களைத் திறக்க வேண்டும்.

---

குச் சென்று வேலை செய்வதில், கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பலத்த சிரமங்களே ஏற்படுகின்றன.

### வெறும் கடதாசிகளால் தமிழர்கள் சந்தேகப் பிராணிகளாக மாற்றப்பட்டிருக்கும்போது, அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

தமிழர்களின் நாளாந்த நடவடிக்கைகள் சோதனைச் சாவடிகளிலும், பாஸ் பெறும் காரியாலயங்களிலும் கழிகிறது. இதனால் உற்பத்தி, கல்வி உட்பட சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைகிறது. இவர்களைக் கையாள்பவர்களாக இங்கிதமற்ற, எரிச்சலான முகங்களைக்கொண்ட பொலீஸாரும் இராணுவத்தினரும் இருக்கிறார்கள்.

அதிலும் 15–35வயதுக்கு இடைப்பட்டவர்கள் அனுபவிக்கும் தொல்லைகள், இதனால் ஏற்படும் எரிச்சல், கோபம் இவர்களை எங்கே சேர்ப்பிக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை..

தற்போது மனீத உரிமைகள் செயலணிக் குழுவும் எதுவும் சாதிக்க முடியாமல் காலாவதியாகிவிட்டது. வவுனியா நிலவரங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட குழு என்னவாயிற்றென்றே தெரியவில்லை.

### செய்யப்பட வேண்டியவை

தமிழ் மக்கள் பொலீஸாரினாலும், இராணுவத்தினராலும் அடிமைகளாகவும் பகைநாட்டைச் சேர்ந்தவர்களாகவும் நடத்தப்படும் நிலை மாற்றப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் சுயமரியாதை, கௌரவம் எங்கும் காப்பாற்றப்பட வேண்டும்.

தமிழ் பேசுபவர்கள் என்பதற்காக முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் இதே சிரமங்களை அனுபவிக்கிறார்கள். அடையாள அட்டைப் பிரச்சினை பெரும் அளவுக்கு மலையக இளைஞர்களையும் பாதிப்பதாக இருக்கிறது.

அடையாள அட்டைப் பிரச்சினையில் நாடுமுழுவதற்கும் பொதுவான நடைமுறை வேண்டும்.

இடத்திற்கு இடம் வட்டாரத்திற்கு வட்டாரம் பல்வேறு வகையான பாஸ் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. குழறுபடி இல்லாத மக்களை சிரமத்தில்ஆழ்த்தாத எளிமையான நடைமுறை வேண்டும்.

இனரீதியான கண்ணோட்டத்துடன் அணுகும் போக்குக்கு எதிரான கண்டிப்பு.

பொலிஸ் நிலையத்திற்கு வரும் மக்களிடமும், சோதனைச் சாவடிகளிலும் கண்ணியமாக நடந்து கொள்ளுதல். வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகளை கௌரவமாக நடத்துதல்.

ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் பாதுகாப்பு உறுதிசெய்தல்.

தடைசெய்யப்பட்ட, தடை செய்யப்படாத பொருட்கள்பற்றிய தெளிவான அறிவுறுத்தல்.

விடுதிகளிலும் வீடுகளிலும் அத்துமீறல்களை தடுத்து நிறுத்துதல்.

தற்போதைய் நிலவரங்களைச் சாட்டாக வைத்து தமிழர்களிடம் வழிப்பறியில் ஈடுபடும் முடிச்சுமாறிகள் மீது கடும் நடவடிக்கை.

தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளை, ஊழியர்களை பொலீஸ் நிலையங்களில் முகாம்களில் நியமித்தல்.

பொலீஸ் நிலையங்கள், தடுப்பு முகாம்களுக்குச் சென்று கைதிகளைப் பார்வையிடக் கூடிய அதிகாரம் உள்ள சுதந்திரமான மனிதஉரிமை அமைப்புகளின் செயற்பாடு.

அரசியல் கட்சிகள் தொடர்பு கொள்ளும்போது உரிய மரியாதை, உரிய பதில்களைத் தருவதற்கான அறிவுறுத்தல்.

கைதுசெய்யப்படும் ஒருவர்பற்றி, உடனடியாக அவரது உறவினர்களுக்குத் தெரியப்படுத்துதல். பெண்கள் கைதுசெய்யப்படும்போது, பெண் பொலீஸார் வருதல் அல்லது உறவினர் ஒருவரையும் உடன் அழைத்துச் செல்லுதல்.

நாகரீகமான முறையில் கேள்விகளைக் கேட்பதற்கு அறிவுறுத்துதல்.

மொத்தத்தில் பாஸ் நடைமுறையில் உள்ள சகல குழறுபடிகளும் களையப்பட வேண்டும்.

பிரதான வதிவாளர், தற்காலிக குடியிருப்பாளர் இவர்கள் யார் என்பதையும் தெளிவுபடுத்தல் வேண்டும்.

இந்தப் பிரச்சினைகள் உடனடியாக கருத்திற்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இல்லையேல், இவைகள் எல்லாம் பாரதூரமான இனஒதுக்கல் எண்ணங்களையே சிறுபான்மை இன மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

---

கைதானோர்
காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம்
Cuardian Association for person Arrested & Latter Disappeare

தலைமைச் செயலகம்:
342, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

Reged No- J/DS/550/2/97.

Head Office :
342, Stanley Road,
JAFFNA.

11 - 06 - 1997

தமிழ்கட்சிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்.

வடக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக
பல சிந்தர்ப்பங்களில் கைதாகி காணாமற்போனவர்களின் பெற்றோர்

## தமிழ் கட்சிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

வடக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக பல சந்தர்ப்பங்களிலும் கைதாகி காணாமற் போனவர்களின் பெற்றோர், உறவினர்கள் தங்கள் பிள்ளைகளை எங்கே தடுத்து மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய கடந்த 12 மாதங்களுக்கு மேலாக வடக்கில் உள்ள பல இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையங்களுக்கு அலைந்துவருகிறார்கள். "உங்கள் பிள்ளைகளை நாங்கள் காணவில்லை; நாங்கள் பிடிக்கவில்லை" என்ற பதிலையே அனைத்து இடங்களிலும் அவர்களால் கேட்க முடிந்தது.

> "தமிழ்க் கட்சிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் 'கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்' வெளியிட்டுள்ள அறிக்கை.

எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்ததோ? எங்கள் பிள்ளைகளை இனி நாங்கள் காண்போமா? என்ற நிலையில் அனைத்துப் பெற்றோர் உறவினர்களாலும் உருவாக்கப்பட்டதே 'கைதானோர் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம்' ஆகும்.

எங்கள் பிள்ளைகள் இருக்குமிடத்தை அறிவதும், அவர்களிடமிருந்து கடிதத் தொடர்பை ஏற்படுத்துவதும், அவர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டு இருப்பின் நீதியின் முன் நிறுத்தும்படி கேட்டுக் கொள்வதுமே எமது சங்கத்தின் நோக்கம். தனித்தனியாகத் தேடியலைந்து இனி எம்மால் முடியாது என்ற நிலையில்தான் ஒன்றுகூடி அனைவரும் சங்கத்தை ஆரம்பித்தோம்.

எங்கள் சங்கம் எந்த அரசியல் நோக்கத்தையும் கொண்டதல்ல; எமது கோரிக்கை எமது பிள்ளைகளின் விடிவுக்காக வேண்டுவதாகும்.

'சூரியக்கதிர்' நடவடிக்கையின்போது வலிகாமத்து மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம்புகுந்திருந்த வேளையில், மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும், வானொலி சாதனங்கள் வாயிலாகவும் "தமிழ் சகோதரர்களே! மீண்டும் உங்கள் இருப்பிடங்களில் குடியேறுங்கள். குற்றவாளிகளாயினும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்; இராணுவத்தினர் உங்களைப் பாதுகாப்பார்கள்; உங்கள் வாழ்க்கை சுபீட்சமடைய வழிசெய்வேன்..."என்றெல்லாம் கூறினார். அவர் மீதும் அரசின் மீதும் இராணுவத்தினர் மீதும் கொண்ட நம்பிக்கையின் பேரில் நாங்கள் பலரும் இராணுவக் கட்டுப்பாடுள்ள இடங்களில் மீண்டும் தங்கினோம்.

ஆனால் இன்று நடந்தது என்ன? கொடுத்த வாக்குறுதிகள் எங்கே? இன்று எமது உயிரிலும் மேலான செல்வங்கள், பலர் மத்தியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.அவர்கள் எங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் கூட எம்மால் அறிய முடியவில்லை.

எங்கள் நியாயமான கோரிக்கைக்கு குரல் கொடுக்கும்படி, சிங்கள சகோதரர்களுக்கும் எங்கள் சங்கத்தின் மூலமாக பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

அதேபோல், அன்பார்ந்தவர்களே! நாங்கள் தங்களிடம் வேண்டிக்கொள்வது–

எங்கள் செல்வங்கள் இருக்குமிடம் அறிய பெற்றோர் உறவினர்களாகிய நாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அரசிடமும், பாராளுமன்றத்திலும், உயர்மட்ட அதிகாரிகளிடமும் வலியுறுத்தி குரல்கொடுத்து எமக்குப் பங்களிப்பு அளிக்குமாறு அனைத்து தமிழ்க் கட்சிகளிடமும் நாம் அன்பாக வேண்டி நிற்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய இலங்கை ஒப்பந்தம்

## 10 வருடத்தின் பின் ஓர் பார்வை



இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு ஆடி 29ம் திகதியுடன் ஒருதசாப்தம் முடிகின்றது. இவ்வொப்பந்தம் உருவானபோது எட்டு வயதுச் சிறுவர்களாக இருந்தவர்கள் இன்று முழு இளைஞர்களாகி விட்டனர். இவ்வொப்பந்தத்தை உருவாக்குவதில் முன்னின்ற தலைவர்கள் பலரும், அதனை நடைமுறைப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்ட பல தலைவர்களும் இறந்துவிட்டனர்.... இல்லை, படுகொலை செய்யப்பட்டு விட்டனர்.

'தோல்வியில் முடிந்த ஒப்பந்தம் தோல்வியில் முடிந்த ஒப்பந்தம்' என அரசியல் தலைவர்கள் பலராலும், பத்திரிகைகளாலும், புத்திஜீவிகளாலும் திரும்பத் திரும்ப உச்சரிக்கப்படுகின்ற இந்த ஒப்பந்தத்தைப் பற்றி என்ன எழுத இருக்கிறது? என்ன வாசிக்கஇருக்கிறது? மீட்டுப் பார்ப்பதில் என்ன பயன்? என்று பலருக்கு எண்ணத் தோன்றும்.

கடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதென்பது, எதிர்காலத்துக்கான பாதைகளை வகுத்துக் கொள்ள அவசியமாகும் என்பதுடன், இன்றைய இளைஞர்கள் கடந்தகாலம் பற்றித் தெரிந்திருப்பதும் அவசியமாகும்.

### ஒப்பந்தத்துக்கு நடந்தது என்ன?

ஈழப்போராட்ட வர்லாற்றில் பெருமளவு விடயங்கள் மறைக்கப்பட்டன; திரிக்கப்பட்டன; உண்மைகள் பல வெளிவரவில்லை. முக்கியமான அரசியல் நிகழ்வக்ளும் முடிவுகளும் கூட மேலோட்டமாகப் பார்க்கப்பட்டன. அதனடிப்படையில் தொடர்பு சாதனங்களும் கூட எழுந்தமானமான விளக்கங்களைக் கொடுத்தே மக்களை வழிநடத்தின.

ஒப்பந்தம் தோற்றதா? தோற்கடிக்கப்பட்டதா? யாரால்? ஏன்? என்பவற்றுக்கு விடை காண்பது அவசியம்.

புலிகளின் கிலிகொள்ள வைக்கும் கொலைகாரத்தனத்தினால் ஏற்பட்ட பயம், ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஐ.தே.க. அரசாங்கம் உருவாக்கிய தகிடுதத்தங்களால் ஏற்பட்ட அவநம்பிக்கை, புலிகள் இந்திய ராணுவத்துடன் உருவாக்கிய அர்த்தமற்ற சண்டையில் பலநூறு மக்கள் பலியானதால் ஏற்பட்ட ஆத்திரம், ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாகாண ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு விட்டதால் ஏற்பட்ட பொறாமை, இந்தியாவின் பக்கபலத்துடன் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையிலான அரசாங்கம் மாகாண அரசை உறுதிப்படுத்தி விடுமோ என்ற பயத்தில் அதனைச் சீர்குலைக்க மத்திய அரசாங்கமும் புலிகளும் நடத்திய சேறடிப்பு பிரச்சாரங்களும் சதிநாச நடவடிக்கைகளும்...இவை ஒவ்வோர் பகுதி மக்களையும் ஆட்கொண்டிருந்தன. ஆக, அவநம்பிக்கை, பொறாமை, பயம், சேறடிப்பு இவற்றின் அடிப்படையில்தான் அன்றைய சிந்தனைகள் ஆதிக்கம் செலுத்தின.

இன்னோர்வகையில் சொன்னால், உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலான சிந்தனைகளே அன்று பெரும்பாலும் வெளிப்பட்டதே தவிர உணர்வுபூர்வமான, தூரநோக்கின் பாற்பட்ட சிந்தனை வெளிப்படவில்லை.

அவ்வாறு அரிதாக சிந்திப்போரும் வெளிப்படுத்த - செயற்படுத்த முடியாது, வெளிப்படுத்தினால் சிந்திக்கும் சுதந்திரமும் மறுக்கப்பட்டுவிடும் என்பதனால், வாய்மூடியே இருந்தார்கள்.

கடந்த பத்துஆண்டுகளின் அரசியற் போராட்ட வரலாற்றை அல்லது சம்பவங்களின் பகுப்பாய்வை ஓர் சிறு கட்டுரையில் உள்ளடக்கி விட முடியாது எனினும், தமிழ் மக்களும், போராட்டமும், தமிழ் அரசியற் தலைமைகளும் இன்றுள்ள நிலையில், நாம் மீட்டுப் பார்க்க வேண்டிய சில முக்கிய அரசியல் முடிவுகளையும் சம்பவங்களையும் சுருக்கமாக ஆராய்வது தமிழ் மக்களாகிய எம்மை மீளாய்வு செய்து கொள்ள உதவும் என்றே கருதுகின்றேன்.



ஏற்கனவே எரிபற்று நிலையில் இருந்த இனப்பிரச்சினை, ஜூலை இனப்படுகொலையுடன் எரியத் தொடங்கியது.

### இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னணி

1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கெதிரான நாடுதழுவிய இனப் படுகொலையைத் தொடர்ந்து, இலங்கை இனப்பிரச்சினையின் பால் உலகின் கவனம் திரும்பியது. இலங்கைத் தமிழருக்கும் இந்தியாவுக்கும் இருக்கும் வரலாற்று, கலாசார, பண்பாட்டுத் தொடர்புகள் இவ்விடயத்தில் உடனடியாக இந்தியாவைத் தலையிட வைத்தன. ஏறத்தாழ எல்லா ஈழத்தமிழ்த் தலைவர்களும் இந்தியாவில் தமிழ் நாட்டில் இருந்து செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஏற்கனவே எரிபற்று நிலையில் இருந்த இனப்பிரச்சினை, ஜூலை இனப்படுகொலையுடன் எரியத் தொடங்கியது. பெருமளவு இளைஞர்களும் யுவதிகளும் திடீரென முன்வந்து ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்குள் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

ஏறத்தாழ 1986ம் ஆண்டுவரை இந்தியா அனைத்து இயக்கங்களுக்கும் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது. இலங்கை இதற்காக இந்தியாவைக் குற்றம் சாட்டி வந்தது. எனினும் இந்தியா உத்தியோகபூர்வமாக, இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்குத் தான் உதவவில்லை என மறுத்து வந்தது.

1986வரை இயக்கங்கள் தம்மை உறுதியாக வளர்த்துக் கொள்ளும் காலகட்டமாகவும், அதேவேளை படிப்படியாக இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை அதிகரித்தும் வந்தன. இக்காலகட்டத்தில் ஒவ்வோர் இயக்கம் ஒவ்வோர் வகையில் பலமாகவும், அதேவேளை ஒன்றுபட்டுச் செயற்படுவதற்காக முனையும் காலகட்டமாகவும் இருந்தது.

1984ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், ரெலோ இணைந்த ஈழதேசிய விடுதலை முன்னணி (ENLF) உருவாக்கப்பட்டு செயற்பட்டது. கூட்டை மேலும் உறுதியானதாக்கவும், செயற்திறன் உள்ளதாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் சிலரிடம் இருந்தது. 1985 ஏப்ரலில் LTTEயும் ENLF இல் இணைந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கை அரசுக்கும் போராளிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தை திம்புவில் நடைபெற்றபோது மிதவாத TULF, கூட்டில் அதுவரை இணைந்திருக்காத புளொட் உட்பட ஈ.என்.எல்.எஃப். உறுப்பு இயக்கங்கள் அனைத்தும் ஒரே குரலில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்தனர். இலங்கைத் தமிழர் வரலாற்றில், தமிழ் மக்கள் விடயத்தை ஒரே குரலில் ஆறு கட்சிகள் பிரதிபலித்ததன் மூலம், அதிக ஒன்றுபட்ட செயற்பாட்டைக் காட்டிய நிகழ்வும் காலகட்டமும் அதுவாகும்.

இவ்வொற்றுமை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும், விரிவாக்கப்பட வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா, ரெலோ போன்றவை முயற்சிகளை மேற்கொண்டிருந்த அதேவேளை இயக்கங்களின் வளர்ச்சி. மக்கள் மத்தியில் அவற்றுக்கான ஆதரவு தொடர்பான ஓர் போட்டிநிலை வடகிழக்கில், குறிப்பாக வடக்கில் வளர்ந்து வந்தது.

ரெலோவின் வெற்றிகரமான இராணுவத் தாக்குதல்கள், ஈ.பி.ஆர்.எல்.எஃப்.இன் மோட்டார்த் தாக்குதல்களால் இராணுவம் முகாம்களை விட்டு வரமுடியாமல் முடக்கப்பட்டமை, அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் ஆகியன மக்கள் மத்தியில் இவர்கட்கு செல்வாக்கை அதிகரித்தே வந்தன.

இத்தகைய மாற்றத்தினை புலிகளால் ஜீரணிக்க' முடியவில்லை. தம்மை மட்டுமே மக்கள் ஆதரிக்க வேண்டும், தாமே தமிழ் மக்களின் ஏகபோக தலைவர்களாக இருக்க வேண்டுமென்ற பிரபாகரனின் உட்கிடக்கையாக இருந்த புகழ் ஆசை ஏனைய இயக்கங்களுக்கெதிரான பொறாமையாக வெளிப்பட்டது.

இதன்விளைவு, 1986 மே மாதத்தில் எவரும் எதிர்பார்த்திருக்காத வகையில் நள்ளிரவில் ரெலோஇயக்கத்தின் முக்கிய முகாம்கள் ஒரே நேரத்தில் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். அதன் தலைவர் சிறீசபாரத்தினம் கொல்லப்பட்டார். அவ்வியக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டது.

தொடர்ந்து, உட்பிரச்சினையால் செயற்பாடு குன்றியிருந்த புளொட் தடைசெய்யப்பட்டது.

அதே ஆண்டு மார்கழியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்களும் சுற்றிவளைக்கப்பட்டு, நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதுடன், இயக்கம் தடைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### இயக்கங்களை புலி தடுத்த பின் இராணுவம் நடத்திய ஒப்பரேஷன்லிபரேஷன்

1983-1986 வுரை, அனைத்து இயக்கங்களின் செயற்பாட்டால் முகாம்களை விட்டு வெளியே வர முடியாமல் இருந்த இராணுவம், புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்து செயற்பாட்டை முடக்கியதும், "ஒப்பரேஷன் லிபரேஷன்" என்ற பெயரில் யாழ் குடாவைக் கைப்பற்றும் தாக்குதலை வடமராட்சியில் இருந்து ஆரம்பித்தனர்.

தாம் மட்டுமே தமிழ்மக்களைப் பாதுகாத்துக் கொள்வோம் என மார்தட்டி ஏனைய இயக்கங்களை காட்டுமிராண்டித்தனமாகவும், அரசியல் தூரநோக்கின்றியும் கொன்றொழித்து தடைசெய்ததன் மூலம், விடுதலைப் போராட்டத்துக்கு தம்மை அர்ப்பணிக்க விரும்பி முன்வந்த பல்லாயிரம் இளைஞர்களை போராட்ட அரங்கை விட்டே துரத்தியடித்தனர்.

- எஸ். கந்தையா —

இவர்களின் இந்த சர்வாதிகார நடவடிக்கையுடன் தமிழ்க் கட்சிகளிடையேயான ஐக்கியம் சிதறடிக்கப்பட்டது; ஒன்றுபட்டுநின்று விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த மக்களின் ஒற்றுமை சிதறடிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டத்தின் தரமும்,அளவும் மிக வீழ்ச்சியடைந்தன. போராட்டத்தின் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது. இயக்கங்களில் தமது பிள்ளை செயற்படுவதிற் பெருமைப்பட்டிருந்த பெற்றோர், எப்பாடுபட்டேனும் பிள்ளைகளை அதிலிருந்து வெளியேற்றி வெளிநாடுகட்கு அனுப்ப முற்பட்டனர்.

எப்பொழுது ஏனைய இயக்கங்களை புலிகள் அழிக்க ஆரம்பித்தார்களோ அப்போதே விடுதலைப் போராட்டம் திசை மாறிவிட்டது; தமிழீழக் கொள்கை வலுவிழந்துவிட்டது. தமிழ்நாட்டில் போராளிகளுக்கிருந்த மதிப்பும், அவர்கள் மீதிருந்த நம்பிக்கையும் இல்லாமற் போனது.

தனிநாடொன்றை அமைப்பதற்கான போராட்டம் என்பது எத்தனை கடினமானது என்பதையும், அதற்கு எந்தளவுக்கு ஒன்றுபட்ட தொடர்ச்சியான செயற்பாடுகள் அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும், ராஜதந்திர ரீதியிலும் தேவை என்பதையும், இதற்கு சர்வதேச ஆதரவைத் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லவேண்டிய தேவை எதனையும் புரிந்துகொள்ளும் அரசியற் தூரநோக்கோ, வரலாற்றுஅறிவோ இன்றி ஈழப்போராட்டம் புலிகளால் அதன் ஆரம்பப் பருவத்திலேயே சிதறடிக்கப்பட்டது.

பாலஸ்தீனத்தைப் பற்றி எல்லோரும் பேசுகின்றோம். கடந்த 50 ஆண்டுகட்கு மேலாக இடதுசாரிகள், வலதுசாரிகள், நடுநிலைவாதிகள், மதவாதிகள் (அல்பட்டா, DFLP, PFLP போன்ற பல ஸ்தாபனங்கள்) இணைந்த ஓர் ஒன்றுபட்ட அமைப்பாக இன்றுவரை அது செயற்பட்டு, பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற ஒரு குடையின்கீழ் செயற்பட்டதனாலேயே அதற்கு சர்வதேச அங்கீகாரமும், இன்று தீர்வை எட்டுகின்ற சூழ்நிலையும் ஏற்பட்டது.

இஸ்ரேல், இத்தனை அரபு நாடுகளுக்கெதிராகப், போராடி தன்னை ஓர் தேசமாகக் கட்டியெழுப்பியது சர்வாதிகாரத் தலைமையின்கீழ்அல்ல. டென்குறியன் தலைமையிலான இடதுசாரிக் கட்சி. பெகின் தலைமையிலான வலதுசா ☞



சிறீசபாரத்தினம், பிரபாகரன், பத்மநாபா, பாலகுமார் - தமிழ் இயக்கங்கள் 1985ல் ஈ.என்.எல்.எஃப். ஆக இணைந்து நின்றனை

www.padippakam.com



ரிக் கட்சி எனப் பலதரப்பட்ட முரண்பட்ட கொள்கை, அணுகுமுறை கொண்ட கட்சிகள் இருந்தன. அக்கட்சிகளுக்கு இராணுவப் பிரிவுகளும் இருந்தன. இவை தமக்குள் சண்டையிடவில்லை. இக்கட்சிகள் இணைந்தே அரசியல், இராணுவ முடிவுகளை எடுத்தன, செயற்பட்டன. ஆரம்பமுதல் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையிலேயே செயற்பட்டனர்.

ஆபிரிக்க தேசியகாங்கிரசும் பல குழுக்களை உள்ளடக்கிய ஒன்றாக தொடர்ச்சியாகச் செயற்பட்டதனாலேயே வெற்றி பெற்றது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அகிம்சை முறையில் காந்தியும், இராணுவ ரீதியில் நேதாஜியும், வன்முறை வழியில் பகத்சிங், ராஜகுரு, வாஞ்சிநாதன் என பலதரப்பட்ட தன்மைகளும் காணப்பட்டன. மத அடிப்படைக் கட்சி, இடதுசாரிக் கட்சி என பல்வேறு கட்சி வேறுபாடுகளும் இருந்தன. இவை எவையும் ஒன்றையொன்று தடுக்கவில்லை. மாறாக, ஒரேநோக்கில், ஒன்றையொன்று வலுப்படுத்தும் வகையில் செயற்பட்டன. இதன்மூலமே இந்தியா சுதந்திரம் பெற்றது.

ஆனால், ஈழப்போராட்டத்தின் ஆரம்பத்திலேயே பல கட்சிகள் உட்கட்சி ஜனநாயகத்தை மறுத்தன. கட்சிகளிடையேயான ஜனநாயக ரீதியான செயற்பாட்டை ஐயத்துடன் பார்த்தன. இதில் புலிகள் முதலிடம் வகித்தனர்.

இந்தவகையில், ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்கட்சி ஜனநாயகத்திலும் சரி, கட்சிகளிடையேயான ஜனநாயக ரீதியான செயற்பாட்டிலும் சரி ஆரம்பமுதல் இன்றுவரை சிந்தனைபூர்வமாக செயற்பட்டு வருவதையும், ஏனையவர்களையும் அவ்வாறு கொண்டுவருவதில் முழுமுயற்சி எடுத்து வருவதையும் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

1986 டிசம்பரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உம் தடைசெய்யப்பட்டபின், போராட்ட பலம் மனோரீதியிலும், அளவுரீதியிலும் வீழ்ச்சியடைந்த நிலையில்தான் இலங்கை ராணுவத்தின் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' ஆரம்பித்தது. மூன்று நாட்களில் இராணுவம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கரையிலிருந்து அச்சுவேலி வரை எதிர்த்தாக்குதலின்றி சுலபமாக முன்னேறி, வடமராட்சி முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

83 கலவரத்தின் பின் இரண்டாவது தடவையாக யாழ்குடா மக்களில் பெரும்பகுதியினர் இந்தியாவின் ராமேஸ்வரம் நோக்கி படகுகளில் வந்து குவிந்தனர். இவர்களுடன் புலிகளும் கணிசமானோர் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தனர்.


சிலதினங்களில் இலங்கை இராணுவம் யாழ்குடாவைக் கைப்பற்றிவிடும் என்ற நிலையே காணப்பட்டது.இந்நிலையிற்தான் பின்புலமாக இருந்து செயற்பட்ட இந்தியா நேரடியாகத் தலையிடவேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டது.

## இந்தியத் தலையீட்டின் நோக்கம்

இந்தியா தனது நலனுக்காகத்தான் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டதே தவிர தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டல்ல என்ற வாதம் புலிகளினாலும், வேறுசில அரசியற்சக்திகளாலும் பிரச்சாரப்படுத்தப்பட்டது. மக்களிலும் ஓர் பகுதியினர் அதனை ஏற்றுக்கொண்டதாகவே தோன்றுகிறது.

எந்த ஓர் மனிதனும் சரி, எந்தவோர் நாடும் சரி தமது நலன்களை முன்னிறுத்தியே செயற்படுவார்கள் என்பதில் கருத்துமாறுபாடு இருக்க முடியாது. இந்தியாவைப் பொறுத்தவரை, இப்பிராந்தியத்தில் தனது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டிய நலன் இருந்தது.

90ம் ஆண்டில் சோவியத் யூனியன் வீழ்ச்சியுறும் வரை பனிப்போர் காரணமாக பல பிராந்தியங்களில் பதட்டம் நிலவியது. தெற்காசியப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை, எல்லாவகையிலும் பலம்பொருந்திய நாடாக இந்தியா திகழ்ந்தது



ஆரம்பத்தில் (1986 வரை) பொதுவாகவே ஈழப்போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அம்சத்தைக் கொண்டிருந்தது. அது தந்திரோபாய ரீதியிலும், பிராந்திய அமைதி - பாதுகாப்பு என்ற ரீதியிலும், சோஷலிச கொள்கையை முன்னெடுத்தல் என்ற ரீதியிலும் சரியானதும் தேவையானதுமாகும்.

டன், அது சோவியத்தின் தொடர்ச்சியான நட்பு நாடாகவும் விளங்கியது. அத்துடன் அதன் கூட்டுச்சேராக் கொள்கையும், கூட்டுச்சேரா இயக்கத்தில் அதன் தலைமைப் பாத்திரமும் உலக அரங்கில் இந்தியாவும் ஓர் வல்லரசாக எழுகின்ற போக்கினையே வெளிப்படுத்தியது.

எனவே, 'இப்பிராந்தியத்தில் தனது செல்வாக்கினை வலுப்படுத்த வேண்டுமானால் இந்தியாவைப் பலவீனப்படுத்தியாக வேண்டும் என்ற தேவை அமெரிக்காவுக்கு இருந்தது.

ஏறத்தாழ, காஷ்மீர் பிரச்சினை ஐ.நா.சபைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து அமெரிக்கா இந்தியாவின் ஸ்திரத்தைக் குலைக்க பல முனைகளில் செயற்பட்டு வந்தது.

இவ்வகையில், இந்தியாவின் வடக்கெல்லை நாடான பாகிஸ்தானுக்கு அமெரிக்காவுடன் மிகநீண்டகாலமாக இருக்கும் ராணுவக் கூட்டும், மறுபுறம் பங்களாதேஷ் உடன் நல்லுறவின்மையும், நேபாளத்தை சீனா தன்னுடைய நட்புசக்தியாக மாற்ற முனைவதும், இன்னோர்புறம் இந்திய–சீனா எல்லைத் தகராறு... இவை அனைத்தும் இந்தியாவின் பர்துகாப்புக்கும், ஸ்திரத்தன்மைக்கும் சவாலாக இருந்துகொண்டிருந்தன.

இந்நிலையில், இலங்கையின் வழமையான மேற்கத்திய–அமெரிக்க சார்பு வெளியுறவுக்கொள்கையும், திருகோணமலையில் அமெரிக்கக் கம்பனிக்கு எண்ணெய்க் குதங்களை இலங்கை கொடுக்க முன்வந்தமையும், இரணவிலவில் அதியுயர் சக்திமிக்க வானொலி மையம் அமைக்க அனுமதி வழங்கியமையும், இலங்கை மண்ணிலும் அமெரிக்காவின் தளம் அமையும் ஆபத்தும், இதன்மூலம் இந்திய பாதுகாப்பிற்கு மேலும் நெருக்கடி ஏற்படும், அதனைத் தடுக்க வேண்டும் என்ற தேவையும் இந்தியாவிற்கு இருந்தது.

## ஒன்றுடன் ஒன்று ஒத்தும் ஒன்றையொன்று பலப்படுத்தியும்...

ஆனால் இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் எதுவெனில், இலங்கையில் அமெரிக்கத் தளம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற இந்தியாவின் தேவைக்கும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் என்ன முரண்பாடு இருக்கின்றது என்பதுதான்.

உண்மையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆரம்பகாலத்தில் குறிப்பிடத்தக்களவுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருந்தது. கூட்டணி உட்பட தமிழ்இயக்கங்கள் எல்லாமே சோஷலிச ஈழமே தமது குறிக்கோள் என அறிவித்தன. சாதி, மத, பிரதேச வேறுபாடற்ற ஓர் சமதர்ம (சோஷலிச) ஈழத்தைக் கட்டியெழுப்புவதே குறிக்கோள் என அறிவித்தன.

இதனை எத்தனை இயக்கங்கள் கருத்து ரீதியாகப் புரிந்துகொண்டு உளமார செயற்பட்டன என்பது வேறுவிடயம். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இதுவிடயத்தில் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் உறுதியாகவிருந்தது. ஈரோஸ், புளொட் ஆகியவையும் இதனை அவ்வப்போது வலியுறுத்தின. ஏனையவை தெளிவான புரிதலின் அடிப்படையில் இல்லாவிட்டாலும், இலங்கையின் அமெரிக்க சார்புக் கொள்கையையும், இதனால் இலங்கை ராணுவம் அமெரிக்காவினாலும் அதன் நேசசக்திகளாலும் பலப்படுத்தப்படுவதைப் புரிந்துகொண்டதன் அடிப்படையிலும், இந்தியாவின் நட்பின் அவசியத்தைப் புரிந்துகொண்டதன் அடிப்படையிலும் ஏகாதிபத்தியத்தை (அமெரிக்காவை) எதிர்க்க வேண்டிய நிலையில் இருந்தன.

எனவே, ஆரம்பத்தில் (1986 வரை) பொதுவாகவே ஈழப்போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அம்சத்தைக் கொண்டிருந்தது. அது தந்திரோபாய ரீதியிலும், பிராந்திய அமைதி - பாதுகாப்பு என்ற ரீதியிலும், சோஷலிச கொள்கையை முன்னெடுத்தல் என்ற ரீதியிலும் சரியானதும் தேவையானதுமாகும்.

மேலும், இந்தியா தனிநாட்டை அங்கீகரிக்காதபோதும், இலங்கையில் தமிழ் மக்கள் சுயகௌரவத்துடனும் சமஉரிமைகளுடனும் தமது தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்திக் கொள்ளும் வகையிலான அதிகாரங்களுடன் வாழ வழியேற்படுத்த வேண்டும் என்பதை இந்தியா எப்போதும் வலியுறுத்தியே வந்தது. இலங்கைத் தமிழ் மக்களின் நலனில் உலகில் வேறெந்த நாடேனும் இந்தளவுக்கு ஈடுபாடு காட்டவில்லை; காட்டவும் முடியாது.

எனவே, இங்கு இந்தியாவின் நலனும் தமிழ்மக்களின் நலனும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போவதும், ஒன்றை ஒன்று பலப்படுத்துவதுமாகும். இதனைப் புரிந்துகொள்ள புலிகள் உட்பட சில அரசியல் சக்திகள் தவறிவிட்டன; அல்லது புலிகளின் குறுகிய சர்வாதிகார வெறிக்காக இவை மறைக்கப்பட்டு பொய்ப்பிரச்சாரம் செய்யப்பட்டது.

என்ன காரணமோ, பல தமிழ்ப் புத்திஜீவிகளும் இதற்கு ஒத்தூதினார்கள். இது, தமிழ் மக்களின் ஆத்ம நண்பனான, பலமிக்க நண்பனான இந்தியாவை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தவே உதவியது.

1983ம் ஆண்டிலிருந்து இலங்கை அரசு, இந்தியாவிற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே ஓர் இடைவெளியை ஏற்படுத்துவதைத் தனது ராஜதந்திரமாகக் கொண்டிருந்தது எனினும், தமிழ்மக்களின் தரப்பிலிருந்து வந்த இப்பிரச்சாரமே வெற்றியைத் தேடிக்கொடுக்க உதவியது.

யாழ்குடா கைப்பற்றப்பட்டுவிட்டால் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான களமே இல்லாமற் போய்விடும், இலங்கை ராணுவரீதியாக வென்றுவிட்டால் பேச்சுவார்த்தைக்கே வராது, இதன் மூலம் ஈழ்ப்போராட்டம் பெருமளவுக்கு நசுக்கப்பட்டுவிடும், பேச்சுவார்த்தைக்கான கதவு மூடப்பட்டால் இந்திய நலன் மட்டுமின்றி இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்த முடியாது. எனவே, வடக்கிற்கெதிரான உணவுத் தடையையும், போர்மூலம் மக்கள் லட்சக்கணக்கில் இந்தியா வருவதையும் காரணம் காட்டி மனிதாபிமான உதவியாக வடக்கு மக்களுக்கு உணவும் மருந்துகளும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்ற பிரச்சாரத்துடன் இலங்கை ஆகாய எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து யாழ்ப்பாணத்திற்குள் உணவுப் பொட்டலங்களைப் போட்டது. இது இலங்கைக்கு ஓர் எச்சரிக்கையாகவே அமைந்தது.

இந்திய விமானப்படை யாழ்குடாவின் மேல் பறந்ததுடன்தான் ஒப்பரேஷன் லிபரேஷன் நிறுத்தப்பட்டதே தவிர, மில்லரின் தற்கொலைத் தாக்குதலால் அல்ல.

## ஏறத்தாழ இந்திய மாநில அதிகாரங்கள்

திம்பு பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தாலும், தீர்வுத்திட்டம்



இந்திய விமானப்படை யாழ்குடாவின் மேல் பறந்ததுடன்தான் ஒப்பரேஷன் லிபரேஷன் நிறுத்தப்பட்டதே தவிர, மில்லரின் தற்கொலைத் தாக்குதலால் அல்ல.

ஒன்றை உருவாக்கும் பொருட்டு டெல்லி அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டே வந்தது. கொழும்பில் வட்டமேசை மாநாடு, பின்னர் சிதம்பரம், பார்த்தசாரதி என பலரின் துணையுடன் இப்பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வகையில் இந்திய மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய முறைக்கு சற்று குறைவான ஓர் அதிகாரப் பரவலாக்கல் அலகு, அதிகாரப் பரவலாக்கலையும் கொண்ட ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டது.

முக்கியமாக வடக்கு கிழக்கு இணைப்பு, தமிழ் மொழியும் அரசகரும மொழி ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இத்திட்டம் அனைத்துப் பிரச்சினைக்கும் தீர்வு காணவில்லை. மாறாக, தீர்வு எத்தகைய முறையில் அமைய வேண்டும் என்பதற்கான ஓர் புறவரைவாகவே காணப்பட்டது. எனினும், அதிகாரப்பரவலாக்கலில் ஏறத்தாழ இந்திய மாநில அதிகாரங்களை ஒத்த பரவலாக்கல் முறைக்கு இலங்கை அரசு சம்மதித்திருந்தது.

எனவே இத்திட்டத்தின் அடிப்படையில் இலங்கைஅரசுடன் ஓர் ஒப்பந்தத்தை உருவாக்குவதன் மூலம் பேச்சுவார்த்தைக்கான களத்தை உறுதிப்படுத்துவதும், தீர்வுக்கான ஆரம்பமாக இதனைக் கொள்வதன் மூலம் இந்தியாவின் பின்பலத்துடன் தமிழ் மக்களின், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் திட்டவட்டமான பேச்சுவார்த்தை நடத்தி நிலைத்திருக்கக் கூடிய தீர்வுக்கு வரமுடியும் என்பதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது என்பதுடன் தமிழ் இயக்கங்களுக்கும் இவ்வாறே கூறப்பட்டது.

இத்திட்டத்தின் அடிப்படையிலேயே இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதில் இந்திய பாதுகாப்பு நலன்களை உத்தரவாதப்படுத்தும் வகையில், இந்திய நலன்களுக்கெதிராக இலங்கை மண் பயன்படுத்தப்பட மாட்டாது என்ற உத்தரவாத கடிதத்தையும் இந்தியா பெற்றது.

இங்கு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக, அவர்கள் சார்பில் இந்தியா கையெழுத்திட்டது என்பது முக்கியமான விடயமாகும்.

இலங்கைத் தமிழர் சார்பில் இந்தியா கையெழுத்திட்டதென்பது இரண்டுவிதமாகப் பார்க்கப்பட்டது. இந்தியாவில் ஒருசாரார், இந்தியா மத்தியஸ்தம் வகித்து இலங்கைப் போராளிகட்கும் அரசுக்குமிடையே ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்க் வேண்டும். மாறாக, இந்தியா கையெழுத்திடுவது இன்னோர் நாட்டுப் பிரச்சினைக்குள் நேரடியாகத் தலையிடுவதாகும். இது இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு நல்லதல்ல, ஏற்புடையதல்ல என வாதிட்டனர். இலங்கையிலும் ஒருசாரார் (அரசியல் காரணங்களுக்காக இந்திய எதிர்ப்பு நிலைப்பாடுள்ளவர்கள்) அதனை ஆமோதித்தனர்.

இன்னோர் பார்வை இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை, கடந்த கால்ங்களில் தமிழ்த் தலைவர்கட்கும்அரசுக்குமிடையே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் சர்வசாதாரணமாக குப்பையில் வீசப்பட்டன. எனவே இத்தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் அதற்கு உத்தரவாதம் தேவை. அது இந்தியாவாக இருப்பது விரும்பத்தக்கது என்றும், மேலும் ஓர் நட்புநாடு எமது சார்பில் எமது பாதுகாவலனாக செயற்படுவது என்பது, இதனை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதத்தையும், தமிழர் தரப்பில் நம்பிக்கையையும் தரும். எனவே இது தேவையானதே என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்தனர்.

இவ்வகையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உட்பட பல இயக்கங்கள் இரண்டாவது நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன.

புலிகளைப் பொறுத்தவரை, தாங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை விட்டுவிட்டோம் என யாரும் பழிபோட முடியாது, எனவே இது நல்லது என ஆதரித்தனர்.

(அடுத்த இதழில் தொடரும்)

அணுயுத்தத்தில் வெற்றிபெற ஒரே வழி அது ஆரம்பமாகாமல் பார்த்துக் கொள்வதுதான்.

- ஜெனரல் ஓமர் பிராட்லி

படிப்பகம்

www.padippakam.com



அன்பின் ஆசிரியருக்கு,

# ஐரோப்பாவிலிருந்து ஈழமக்களுக்கும், வெளிநாட்டினர்க்கும்



புதிய கண்ணோட்டம் வெளியீடு –36ல் வந்த கடிதங்கள் பார்த்தேன். 'யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு', 'கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு', வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு' ஆகிய தலையங்கங்களில் இருந்த கடிதங்கள் அங்கத்தைய நிலைமைகளை ஓரளவு பிரதிபலித்திருந்தன. அத்தோடு, வெளிநாடு வரமுயன்று வெற்றி காணாதோர் நிலைமையும் தெரிந்தது.

எனது இக்கடிதத்தில், வெளிநாடுகட்கு வெற்றிகரமாக வந்துசேர்ந்தோர் பற்றியும், அவர்களது இங்கத்தைய எண்ணப்பாடுகள், வாழ்க்கை முறைகள், ஈழமக்களுக்கு அவர்களது பங்களிப்புகள் பற்றி எழுதலாம் என நினைக்கிறேன்.

1970களுக்கு முன் அனேகமாக ஓரளவு வசதியான தமிழர்கள் தமது மேற்படிப்புக்காக வெளிநாடுகள் போனார்கள். குறிப்பாக இங்கிலாந்துக்குப் பலர் போனார்கள். படித்து முடிந்ததும் கூடுதலானோர் இலங்கை திரும்பி தமது வேலைகளைத் தொடர்ந்தனர்.




1977 கலவரத்தின் பின்பு, ஓரளவு தமிழர்கள் (கூடுதலாக கொழும்புத் தமிழர்கள்) 'அரசியல் தஞ்சம்' கோரி பல நாடுகட்கும் போனார்கள். அதன் தொடர்ச்சியாக 1983 கலவரத்தின் பின், ஆயிரக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகட்கு அரசியல் தஞ்சம் கோரிப் பயணமானார்கள்.

ஐ.நா. அகதிகள் பற்றிய சாசனத்தின்படி, அரசியல் தஞ்சம் கோருவோரை (அவர் அரசியல் அகதியல்ல என நிருபிக்கும் வரை) திருப்பி அனுப்பமுடியாது. அத்தோடுஅவர்களின் தேவைகளையும் அவ்வவ் அரசுகள் கவனிக்க வேண்டும்.

இந்த நிலைமைகளை அறிந்த தமிழர்கள், வடகிழக்கில் இருந்து பெருவாரியாக அகதிகளாக வெளியேறினர். இதுபற்றி ஓரளவு விடயமறிந்த தரகர்கள் (Agents) இந்த அகதிகளின் வெளிநாடு போக வேண்டுமென்ற அவாவை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, பெரிய பணக்காரர்களாக மாறினர். அதே வேளை பல நூற்றுக்கணக்கான அகதிகள் தரகர்மாரின் பேராசையால் இடையிடையே சாகடிக்கப்பட்டனர்.

வெளிநாடு வந்துசேர்ந்த அகதிகள் 'பல வழிகளிலும்' பணம் சம்பாதித்தனர். அப்பணத்தைப் பாவித்து தமது குடும்பங்களையும் வெளிநாடுகட்கு கூப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

இப்படி வந்தவர்களில் பெரும்பாலானோர் அரசியல் தஞ்சம் கோரி இருந்தாலும், அரசியலில் ஈடுபாடோ அறிவோ இல்லாதவர்களாகும். இவர்கள் உண்மையில் பொருளாதார நோக்கில் படையெடுத்தவர்களாகும். இவர்கட்கு ஈழப்போராட்டம் ஓர் பிழைப்பு நடவடிக்கையாகும்.

இதைப்பற்றி சற்று விபரமாகப் பார்த்தோமானால், ஈழத்தில் வறியவர்களும், சாதி குறைந்தோர் எனக் கருதப்படுவோரும், பெண்களும் நிற்க; வசதியான குடும்பங்களும், மேல்சாதியாகக் கருதப்படும் இளைஞர்களும் வெளிநாடுகட்கு கூடுதலாகப் போனார்கள். (இங்கு "பெடியளை ஆமி பிடிக்குது" என்றும், "பெடியளை புலி பிடிக்குது" என்றும் பெற்றோர் ஆண்களையே, உள்ள காணிகளை விற்று அனுப்பினார்கள். பெண்களின் உயிர் பற்றி பெற்றோர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.)

இப்படியாக 'அரசியல் தஞ்சம்' கோரி வெளிநாடு வந்தோர், அப்போதைய நிலைமைக்கேற்ப தமது உயிருக்கு யாரால் ஆபத்து என்று ஒரு கதையைக் கூறி 'அரசியல் அகதி' ஆகிவிடுவார்கள். அதன் பின் மேலே கூறியதுபோல் பல வழிகளிலும் பணம் சம்பாதிக்கும் அலுவல்களையே கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

'திரைகடலோடித் திரவியம் தேடு' என முன்னோர் கூறியது, எமது மக்களை நல்ல வழிகளில் பணம் சம்பாதிக்கும்படி. ஆனால், 'பல வழிகளிலும்' என்பது பெரும்பாலும் நேர்மையற்ற பேராசை முறைகளாகும். அதை விபரிக்கத் தேவையில்லை.

முக்கியவிடயம் யாதெனில், ஈழ அரசியலில் எந்த அக்கறையுமற்றவர்கள், தாம் தொடர்ந்து அகதிகளாக இருக்க வேண்டுமென்றால் ஈழத்தில் போராட்டம் தொடரவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

புலிகளும் இந்த நிலைமையை தமது பணம் சேர்க்கும் வாசகங்களில் ஒன்றாகப் பாவிக்கத் தொடங்கினர். அதாவது, "நாம் சண்டை பிடிப்பதால்தான் நீங்கள் அகதிகளாக வந்தீர்கள்.... சண்டை நின்றால் திருப்பியனுப்பிப் போடுவார்கள். எனவே சண்டை தொடர மாதாமாதம் ஒரு தொகை தர வேண்டும்...." என்று கட்டாயப்படுத்திப் பணம் வசூலிக்கத் தொடங்கினர். இது தொடர்கிறது.

எனவே வெளியேறிய அரசியல் அகதிகட்கு முக்கியமான விடயம், ஈழம் ஒன்று எடுத்து அங்கு திரும்பிப் போகவேண்டும் என்பதல்ல. போன நாடுகளில் 'நிரந்தர வாசி' ஆகும்வரை போர் தொடர்ந்தால் போதும் என்பதுதான்.

ஈழத்தில் யாழ்குடாநாடு இராணுவ வசம் போனால் என்ன, கிளிநொச்சி போனால் என்ன, மன்னார் மட்டக்களப்பு போனால் என்ன பரவாயில்லை.... சண்டை தொடர வேண்டும் என்பதுதான் இந்த 'அரசியல் தஞ்சம் கோரியுள்ளோரின்' அவா என்று கூறினால் அது மிகையாகாது.

இவர்கள் ஊரில் இருந்த சமயம் இயக்கங்களில் இருந்தவர்களாக இருக்கலாம், வெளிநாடு போனோர் 'நாட்டுப் பற்றற்றோர்', 'துரோகிகள்' எனக் கூறியவர்களாக இருக்கலாம், இயக்க நண்பர்களை 'தோழர்கள்' எனக் கூறியிருக்கலாம், பல உற்றார் உறவினர் நண்பர்களை இப்போராட்டச் சூழலுக்குள் கொண்டுவந்திருக்கலாம்..... ஆனால் இன்று யாவும் மறந்து வெளிநாட்டு மோகத்தில் மாண்டு போயுள்ளதைத்தான் என்னால் பார்க்க முடிகிறது.

வெளிநாட்டில் கிடைக்கும் 'பஞ்சப்படியே' இலங்கையில் பெரிய உத்தியோகத்தர்கட்கு சம்பளமாகக் கிடைக்கிறது எனக் கதைப்போரும், பஞ்சப்படியோடு மற்றுவழி உழைப்புகள் பலவற்றையும் ரூபாயில் பெருக்கி சந்தோஷப்படுவோருமாக ஈழமக்கள் இங்கு வாழ்கிறார்கள்.

இவர்கள் இப்போ புலி சண்டை பிடிக்கிறது என்பதற்காக அல்ல, தமது நிரந்தர நிலைக்காக சண்டை தொடர புலிக்கு பணம் கொடுக்கிறார்கள். வேறு இயக்கம் இதைச் செய்தால் அவர்கட்கும் பணம் கொடுப்பார்கள். எனவே, வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் உண்மையான எண்ணப்பாட்டை விளங்கிக் கொள்ள வேண்டும்.

புலி யாழ்ப்பாணத்தை ஆளும் போதே, வெளிநாட்டுப் புலிகள், தரகர்களுக்கூடாக தமது உறவினர்களைக் கூப்பிட்ட வண்ணமிருந்தனர். கொழும்புவரை சென்று அல்லது இந்தியா சென்று மணம் முடித்து வந்தனர்.

இவர்கள் வெளிநாட்டில் "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" என வரட்டுவாதம் பேசிக்கொண்டு, புலியாட்சியில் யாழ்ப்பாணமே போக விரும்பாத 'வீர வேங்கை'களாகும்.

எமது மக்களின் அழிவில், எமது நாட்டின் அழிவில் குளிர்காயும் இப்புலம்பெயர்ந்தோர், தாம் உண்மையான அகதிகளாக இருந்தால், தம்மால்தான் ஈழத்தமிழர் இந்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என உணர்ந்தால், உடன்பிறப்புகள் அநியாயமாகச் சாகடிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

இன்று போர்முனையிலே புலிகளால் வலோத்காரமாக கொண்டுசெல்லப்பட்ட பெண்களும் சிறுவர்களும் செத்துக்கொண்டிருக்கிறார்கள். 'அரசியல் தஞ்சம் கோரி வந்தோர்', தமது 15 வயதுப் பிள்ளைகளை (பெண்களும் ஆண்களும்) காலையும் மாலையும் வலுகவனமாக பாடசாலைக்கு கொண்டுபோய் வருகிறார்கள்.

'இலங்கையில் 12–15 வயதுப் பெண்பிள்ளைகள் சிறுவர்கள் சண்டைபிடிக்கத்தான் வேண்டும்; நாம் ஈழம் எடுக்கத்தான்வேண்டும்' என இந்த வீரவான்கள் பொது இடங்களில் கதைப்பதையும் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஈழத்தில் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி, அவர்களால் வந்த போராட்ட வீழ்ச்சி, அழிவுகள் யாவற்றையும் உணர்ந்து, எமது பிரச்சினையை புலிகளுக்கு குத்தகைக்கு கொடுத்ததுபோல் விட்டுவிட்டு இருக்காது, ஜனநாயக முறையில் நாம் விரும்பிய தலைமையை தெரிவுசெய்து, நிம்மதியாக, அமைதியாக, நீதியாக, ஜனநாயகமாக வாழ முனைவதுதான் அறிவுடமை.

புலிகள் தமிழ் மக்களை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த ஏனைய வெளிநாட்டு நண்பர்கள், மாற்றுக் கட்சி ஒன்றினை வளர்க்க முனையாது, வெளிநாடு வந்ததும் யாவும் மறந்து வேலையும் வீடுமாக இருக்கிறார்கள். இவர்கள், உண்மையில் ஈழத்தில் அமைதி, ஜனநாயகம், நீதி ஏற்பட வேண்டும் என்று விரும்பியிருந்தால், தற்போதைய நிலையில் கூடியவரை சரியான கட்சியை அடையாளம் கண்டு உதவினால்தான் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஓர் உருப்படியான ஜனநாயகத் தலைமை உருவாக முடியும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

எனது பார்வையில், அரசினதும் புலிகளினதும் அநியாயப் போக்குகளை அம்பலப்படுத்திக் கொண்டும், தமிழ் மக்களின் அவலங்களுக்காக குரல்கொடுத்துக் கொண்டும் தொடர்ந்து செயற்பட்டுவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பணி தொடர ஆதரவளிக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

தேவதாஸ்
லண்டன்.




அன்பின் ஆசிரியருக்கு,

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1992 ம் ஆண்டு எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. 300 பேர் சித்திபெற்றனர், அதில் 200 பேருக்கு நியமனங்களும் வழங்கப்பட்டன. மிகுதிப்பேருக்கு வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டும் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து இந்த நூறு பேரும் ஜனாதிபதி முதற்கொண்டு சம்பந்தப்பட்ட சகலருக்கும் மகஜர்கள், கடிதங்கள் எழுதியும் இன்றுவரை ஒரு பதிலும் இல்லை.

போர் அனர்த்தங்களால் வடகிழக்கில் உள்ள அரசதிணைக்களங்களில் பணியாற்றிய எழுதுவினைஞர்களில் பலர் வெளிநாடு சென்றுவிட்டனர்; பலர் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்; சிலர் இறந்துள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் சிலரே பதவி ஏற்கின்றனர். மற்றவர்கள் வெளிநாடு, இடம்பெயர்வு, (பெண்களானால்) திருமணம் என்ற காரணங்களால் நியமனம் கிடைத்தும் பதவி ஏற்பதில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணமாவட்டத்தில் அரச திணைக்களங்களில் இன்று அதிகமான வெற்றிடங்கள் உள்ளன. சில எழுதுவினைஞரின் கடமையை சாதாரண சிற்றூழியர்களும் செய்ய வேண்டிய நிலை.

தற்போதுள்ள வடக்கு கிழக்கு நிர்வாகம், யாழ் மாவட்டத்துக்கு எதனையும் செய்யவில்லை. யாழ் மாவட்ட மக்களுக்கு அதன்மீது நம்பிக்கை இல்லை என்று இங்குள்ள உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகள் குற்றம் சுமத்துகின்றனர். சில திணைக்களங்களில், அவற்றின் உயர் அதிகாரிகளால் தற்காலிக் நியமனங்கள் செய்யப்படுவதாகவும் அறியவருகிறது.

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களில், நியமனம் கிடைக்காதவர்களுக்கு வடகிழக்கு மாகாணசபை அதிகாரிகள் நியமனம் வழங்கினால் என்ன? மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிகசெயலர்கள் எனப் பல்வேறு பதவிகளில் இருப்பவர்கள் இந்த எழுதுவினைஞர் நியமனத்தை வழங்குவதில் அக்கறை காட்டக் கூடாதா?

1980ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது இடம்பெற்ற வேலைநிறுத்தம் காரணமாக பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நட்டஈடு, மீள்நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதைப்போல இந்த நியமனங்களையும் செய்தால் என்ன?

பல்வேறு கஷ்டங்கள், போர்ச் சூழலுக்கு மத்தியில் நாம் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தோம். வெளியுலகின் தொடர்பில்லாத அல்லது தேர்தலே இல்லாத வடகிழக்குத்தானே என்ற எண்ணத்தோடு, இவ்விடயத்தில் அரசும், அரச அதிகாரிகளும் கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது என்பதே எமது வேண்டுகோள்.

எம். தேவகுமார்.
யாழ்ப்பாணம்

படிப்பகம்

www.padippakam.com



வடபிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கு தாவடி கிராம மக்கள் 75 பேர் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள மகஜரின் பிரதி ஒன்று நமக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த மகஜரை முழுமையாக இங்கே பிரசுரிக்கிறோம்.

பிரதிப் பொலீஸ் மா அதிபர்,
வடபிராந்தியம், யாழ்ப்பாணம்.
ஐயா,

யாழ் மாவட்டம், வலிகாமம் தெற்கு செயலர் பிரிவில் அமைந்துள்ள தாவடி கிராமத்தில் வதியும், கீழ்க் கையொப்பமிட்டிருக்கும் மக்களாகிய நாம், அண்மையில் ஏற்பட்ட இடம்பெயர்வுக்குப் பின், 1996 ஏப்ரல் மாத இறுதியில் எமது வதிவிடங்களுக்குத் திரும்பிய பிற்பாடு, நிம்மதியற்ற பயங்கர வாழ்க்கையை வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

பரமு தம்பிரத்தினம், பொன்னன் மனோகரன், நவாலியை சேர்ந்த மார்க்கண்டு என்பவரின் மகளை மணந்துள்ள மற்றொரு மார்க்கண்டுவின் மகன் இந்த மூன்று பேரும் தனித்தனியே தலைமை தாங்கும் மூன்று குழுக்கள் வெவ்வேறாக இக்கிராமத்தில் செயற்பட்டு கீழ்க்கண்ட அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன.

01. குடியில்லாத வீடுகளிலிருந்து இரவுபகல் பாராது எந்த வேளையிலும் கூரை, ஓடுகள், தீராந்தி மரங்கள், கதவுகள், ஜன்னல்கள், தளபாடங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்களைக் களவாடிச் செல்கின்றனர். அயலவர்கள் தலையிட்டுக் கேட்டால், தீய விளைவுகள் பற்றி அச்சுறுத்துகின்றனர்.

02 குடியில்லாத வீடுகளில் கொள்ளையடிக்கும்போது, தங்களை இயக்கமொன்றுடன் இணைத்துக் கூறி, அவர்களது பணிப்பின் பேரில் தாங்கள் செயற்படுவதாகக் கூறி அச்சுறுத்துகின்றனர்.

03. மீளக்குடியேறிய வீடுகளிலிருந்து வீட்டுத் தளபாடங்கள், கால்நடைகளைக் கடத்திச் செல்வதுடன், கால்நடைகளைத் தேடிச் செல்லும்போது, உரிமையாளர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பறித்துக்கொண்டு கால்நடைகளைக் கொடுக்கிறார்கள். தவறின் கசாப்புக் கடைக்கு இரையாக்குகின்றனர்.


இவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினரிடம் சிக்கி எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போதிலும், எதுவித முன்னேற்றமும் இல்லை. சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் இல்லாத காரணத்தால், படையினர் அவர்களைத் தண்டிக்காது எச்சரித்து விரட்டி விடுகின்றனர். காவல்துறையினரிடம் முறையிட்டவர்களும், அச்சுறுத்தலினால் தங்கள் முறைப்பாட்டை வலியுறுத்தாது நழுவிவிடும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

அன்றாட சீவியத்திற்காகப் பயிரிடும் அப்பாவி மக்களினது விவசாய உற்பத்திப் பொருட்கள், அவர்கள் வளர்க்கும் கால்நடைகள் திருடப்படுவதால், நம்மூர் மக்களது நிலைமை பொருளாதார, நிதிக் கஷ்டங்களுக்குத் தள்ளப்பட்டு பரிதாபகரமாகவுள்ளது.

ஆகவே, வளர்ந்து வரும் இவர்களது அடாவடித்தனத்தால் மக்கள் இரவிலும் சரி பகலிலும் சரி சுயாதீனமாக வாழமுடியாதுள்ளது. இக்கிராம மக்கள் நிம்மதியாக பீதியின்றி வாழ்வதற்கா நடவடிக்கையினை காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கிறோம்.

நன்றி.

# குறுக்கெழுத்துப் போட்டி-33



## இடமிருந்து வலம்

1. ஈழத் தமிழர்களுக்கு ஒரே ஒரு தலைவரே இருந்தார் என்பதை நோக்கிச் செல்லும் சமீபத்திய கொலை.
5. 'உப்பைத் தின்றவன் தண்ணி குடிப்பான்; இதைச் செய்தவன் தண்டனை கொள்வான்'.
7. இறந்தவர் நினைவாக, அவர் குடும்பத்தினரால் ஆண்டுதோறும் செய்யப்படுவது.
9. மிகுந்த மகிழ்ச்சி. (குழம்பி)
12. ஒரு பாவமும் அறியாத சாது.
14. ஆகாய கங்கையை பூமிக்கு கொண்டுவந்ததால் இவன் பிரயத்தனம் பேர் பெற்றது.
15. மட்பாண்டங்கள் செய்பவனின் முற்பாதி இங்குண்டு, 'வன்' இல்லை.
16. நம் மூதாதை விலங்கிடம் இல்லாமல் நமக்கு வந்து சேர்ந்தது ஆறாம் அறிவு; அதனிடம் இருந்து, நமக்கு இல்லாமல் போனது இது.
17. ஆற்றல்.
19. இது இல்லாமல் முகம் மழிக்கப் போகலாமா?
21. வீட்டைச் சுடுவது ஓட்டப்பம், இது தன்னையே சுடும். (குழம்பி)
23. கோடுகளாலும் இதை அமைத்துக் கொள்ளலாம்; சினிமாவிலோ நாடகத்திலோ காட்சிகளையும் இவ்வாறு பிரித்துக் கொள்ளலாம்.
24. பாதம் அல்லது பாதியிற் பாதி. (தலைகீழ்)
25. சமமாக, வழவழப்பாக இல்லாமல், மேடுபள்ளமாக இருக்கும் பரப்பு.
27. வெகுமதி.
30. அழிக்கும் செயலுக்கு 'ம்' இல்லை.
31. பூமிக்கு வெளியே நிற்க இடமும் இதுவும் இருந்தால் பூமியையே புரட்டிவிடலாம் என்றார் அரிஸ்டோட்டில்.
32. கடையெழு வள்ளலில் ஒருவன்; கபிலரின் நண்பன்.

## மேலிருந்து கீழ்

1. தமிழ் மாணவர்களைப் போராடத் தூண்டிய முக்கிய காரணிகளில் இதுவும் ஒன்று.
2. கழுதை அறியுமோ இது?
3. வழிபடு.
4. நமது உணவுக்குக் காய் தரும் ஒரு கொடி. இத்திக் காய் காயாதே அத்திக்காய் ---காய். (தலைகீழ்)
5. '---உடையான் படைக்கு அஞ்சான்'.
6. வாழ்க்கையை இங்கு நரகமாக்கிக் கொண்டு, போகும் வழிக்கு இது தேடி நல்லது செய்வோர் உண்டு.
8. செய்த தப்பை விடச் சிலர் அதற்குச் செய்யும் -------தான் எரிச்சலை ஏற்படுத்தும்.
10. பாம்புக்குப் பகை. (தலைகீழ்)
11. மகன்.
13. ஒன்பது கிரகங்களில் ஒன்று.
17. ஒற்றுமை இருந்தால் உலகையே உருட்டலாம். வண்டி நகர இதுகூட ஒற்றுமையோடு உருள வேண்டும்.
18. முடவனுக்குப் பெண்பால். (தலைகீழ்)
20. நீர்ப் பொருள். (குழம்பி)
22. மலர்ச்சி.
25. நெருப்பு.
26. முகத்தில் இருக்கும் பேச்சாளன்; முத்தத்தை எழுதும் தூரிகை. (தலைகீழ்)
28. முகத்தில் அணிய நகை இல்லை; மரமாகலாம் 'னை' இல்லை; 'கட்டுவன்' என ஊரை முடிக்க இவரே தொடக்கம். (தலைகீழ்)
29. கொழும்பு-யாழ் புகையிரதப்பாதையில் இது ஒரு சந்தி.

## குறுக்கெழுத்துப் போட்டி-32 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. மேதினம்
4. வசீகரம்
8. தாரை
9. வழிகாட்டி
10. விமரிசை
12. துடு
13. செவி
14. கறை
15. சிறைக்
16. சவுக்கு
18. கல்
19. வகை
21. லட்டு
23. விருந்து
25. உபநிடதம்
28. துதி
29. உத்தமம்
32. கனிவு
34. மலசலம்
35. சாருமஜும்தார்

**மேலிருந்து கீழ்:**

1. மேதாவி
2. திரைமறைவு
3. சைவம்
4. காவல்துறை
5. சீட்டுக்கவி
7. கடி
7. விஷம்
11. நிலக்கரி
13. செவ்வந்தி
17. குட்டம்
20. கைது
22. உதடு
24. சத்துரு
26. பன்னிரு
27. தாமதம்
30. மலர்
31. கொம்பு
32. சாவு
33. கம(ம்)

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

ஆ. இரகுநாதன்,
காலி வீதி,
கொழும்பு 06.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. பா. கௌசிகன்,
   மானிப்பாய், யாழ்ப்பாணம்.
2. இ. மிதுன்சங்கர்,
   உள்துறைமுக வீதி, திருகோணமலை.
3. ம. சுசீலாதேவி,
   ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
4. வி. குமரகுருபரன்,
   குருமண்காடு, வவுனியா.
5. கே. திஸ்ஸ,
   களுதாவளை 01, களுவாஞ்சிக்குடி.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

# பேச்சளவில் ஐக்கியம் பிரயோசனம் இல்லை



அன்பின் ஆசிரியருக்கு,

புதிய கண்ணோட்டத்தில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் நன்றாக உள்ளன. 'வன்னி-பதட்டத்தின் உச்சியில்' போன்ற கட்டுரைகள் நிறைய தகவல்களைக் கொண்டிருப்பதால் உபயோகம். பத்திரிகை சரியானநேரத்தில் கிடைப்பதில்லை. அரசையும் புலிகளையும் விமர்சிப்பதாகப் போக்குக்காட்டிக்கொண்டு, அரசு சார்பில் நின்று புலிகளைத் தாக்குவதாய்த்தான் தெரிகிறது.

ஐந்து கட்சிகள் கூட்டமைப்பு புஸ்வாணமாகிவிட்டதா? கூட்டமைப்பிலுள்ள கட்சிகள், அந்தந்த ஏரியா தாதாவாக இருந்து பண வசூலும், அடாவடித்தனங்களும் செய்வதை நீங்கள் கண்டுகொள்வதில்லையா? ஒருவர், தானே நேரடியாகச் செய்வது மட்டும்தான் குற்றம் என்பதில்லை; அடுத்தவர் செய்வதையெல்லாம் மறைத்துக்கொண்டு போனாலும் குற்றம்தான். கூட்டமைப்புக்குள்ளேயே சரியான விஷயங்களைக் கொண்டுவர முடியவில்லை என்றால், தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவந்து எப்படி நடத்திக் காட்டப் போகின்றீர்கள்.?

நீங்கள் எல்லோருமே வெறும் பேச்சளவில்தான் இருப்பீர்கள் என்றால், புலிகளை நம்புவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது? இயக்கச் சேட்டைகளை நிறுத்தாத வரை அரசியல் பேசியென்ன? ஐக்கியத்தைக் கொண்டாடியென்ன?

புலிகளை நெருப்பாக விமர்சிக்கும் நீங்கள், அரசின் சுத்துமாத்துக்களையும் துணிந்து எழுதுங்கள். இவ் அரசும் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு இணங்கி வரமாட்டார்கள். இந்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் எல்லோரையும் கொன்றொழித்து, அவர்களின் பிணத்தின் மீது நின்றுதான் பேச்சுவார்த்தைநடத்துவோம் என்று விடாப்பிடியாய் யுத்தம் செய்கிறார்கள். இதன் பலனை அனுபவிக்கப் போகிறவர்கள் எமது சந்ததியினர்தான்.

சும்மா எழுத்தளவில் புலம்பிக் கொண்டிருக்காமல், உண்மையான ஐக்கியத்திற்கும், யுத்த நிறுத்தத்திற்கும் முழுமூச்சாய் பாடுபடுங்கள்; செயற்படுங்கள்.

அமரன்,
மன்னார்.

# பொய்களே வேதம் ஆகுமா?

நீண்ட நாட்களின் பின் இக்கடிதம் எழுதுகிறேன். இங்கு எல்லாம் சுமாராக நடக்கிறது. கனடாவில் எல்லோரும் சமாதானம் வந்துவிடும் என்றே நம்புகிறார்கள்.

தினமுரசு பத்திரிகை இப்போ புலிகளின் கட்சிப் பத்திரிகை போல் வெளிவருகிறது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை தாக்குவதாக நினைத்துக் கொண்டு புலிகளை வளர்க்கும் வேலையை நன்கு செய்கிறார்கள். தும்பன் என்பவனின் கதையை எல்லாம் அவன் ஏதோ தியாகி என்பது போல எழுதி, தமது பத்திரிகை வியாபாரத்தை திறம்படச் செய்கிறார்கள். தலைவர் (டக்ளஸ்) பெரிய புலி எதிர்ப்பாளர்; தொண்டரோ (ரமேஷ்) புலி வியப்பாளர் – புலிகளை வியந்து வியந்து எழுதிக் கொண்டிருக்கிறார். ஆரம்பத்தில் வியாபார தந்திரம்என்றே நினைத்தோம். ஆனால், இப்போது பார்த்தால், தினமுரசு ஆசிரியருக்கு அரசியலில் உண்டாகிவிட்ட பலவீனம் கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்களைப் போல் புலிகளின் சாகசத்திலேயே தங்கிநின்று எழுதும்படியாகி விட்டது.

ரமேஷ் எழுதிவரும் சுத்துமாத்து வரலாற்றை ஏதோ ஈழப்போராட்ட வரலாறென்று பலரும் நினைத்துக்கொண்டு படிக்கிறார்கள். அதில் வரும் வரலாற்றுத் திரிபுகளுக்கு சரியானபடி பதிலளித்து நீங்கள் எழுத வேண்டும். வழக்கமான சோம்பேறித்தனத்தில் நீங்கள் அலட்சியமாய்க் கண்டுகொள்ளாமலிருந்தால், பொய்களே வேதம் ஆகிவிடும்.

குறைந்தபட்சம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பற்றி வரும் செய்திகளுக்காவது மறுப்புத் தெரிவிக்க வேண்டியது உங்கள் கடமை.

கந்தன்கருணை படுகொலை, தியாகிகள் தினம் போன்றவற்றுக்கு துண்டுப்பிரசுரங்கள் அடித்து வெளியிட்டிருக்கிறோம். மற்றவை உங்கள் பதில் கண்டு.

சமரன்,
ரொறன்ரோ, கனடா.

www.padippakam.com






## வாழ்க நடுநிலைமை!

கப்பல் கட்டண அதிகரிப்பு பல்வேறு வழிகளாலும் பாதிக்கப்பட்டுப்போன மக்களுக்கு ஒரு சுமை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும், நியாயமாகப் பார்த்தால் கப்பல் போக்குவரத்திற்கு கூட எரிபொருள், ஊழியர்களின் சம்பளம் என்று ஒரு செலவு உண்டு. ஆனால் எவ்வித தேய்மானமும் இல்லாமல், 'பாஸ்' என்ற ஒரு கடதாசிக்கு கைவரண்டு. ஒட்டாண்டிகளாகி திரும்பி வந்துகொண்டிருக்கும் அகதிகளிடம் பணம் அறவிடப்படுகிறதே.... இதனை கண்டிக்க வேண்டாம். கைவிடுமாறு ஒரு வேண்டுகோளாவது விடப்பட்டதா?

உண்மையில் மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாயின், மக்களைப் பாதிக்கின்ற எந்த ஒரு நடவடிக்கையையும் எதிர்த்துக் குரல் கொடுப்பதுதானே நியாயம்! செய்தவர்கள் யார் என்று பார்த்தே அக்கறை கொள்வதும் அழுத்தம் கொடுப்பதும் உண்மையில் மக்கள் மீதுள்ள அக்கறையினால் இல்லை. "மூக்கில் போட்ட மின்னியையும் பிடுங்கிக்கொண்டுதான் விட்டவை..." என்றும் இன்னும் பலவாறாகவும் வன்னியிலிருந்து திரும்பி வரும் பல தாய்மார்கள் கதறி அழுகிறார்களே! அவர்களின் கண்ணீர் மட்டும் இங்குள்ள எந்த மனிதாபிமானிக்கும் தெரியவில்லை. வாழ்க, எமது தமிழ்ப் பத்திரிகையாளர்களின் நடுநிலைமை!

## பத்திரிகை விமர்சனம்

வாரப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர், ஜனநாயகக் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர். கொழும்பில் இருந்துகொண்டு தீவுப் பகுதியில் வென்று வந்த பாராளுமன்ற அங்கத்தவரில் ஒருவர். முன்னர் இலங்கை வானொலியில் 'மக்கள் குரல்' என்ற நிகழ்ச்சியில் அவரே குறிப்பிடும் இரண்டெழுத்து இயக்கத்தின் தலைவரை 'பங்கர் திருமகன்' என வாங்கு வாங்கென வாங்கியவர். தற்சமயம் (அவரது தலைவர் தவிர்ந்த) தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை கிண்டல் பண்ணுவதில் இன்பம் காணுபவர். திருமலையில் கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மேல் பல புகார்ப் பட்டியல்கள் உண்டு. எனவே அவர் கொல்லப்பட்டது சரிதான் என அதிரடியாகக்கூறுமளவுக்கு அறிவை வளர்த்துக் கொண்டவர். தமிழ் மக்களுக்காக இவர் விடும் கண்ணீரால்தான் ஆறு, கடல் எல்லாம் உப்புக் கரிப்பதாகவும் ரீல் விடக் கூடியவர். ஆனால் ஒவ்வொரு அவசர கால நீடிப்பு விவாதத்தின் போதும் அதற்கு சாதகமாக முன்னின்று வாக்களிப்பவர், யாரும் எதிர்த்து விட்டால் இது கபட நாடகம் என தனது டத்திரிகையில் வர்ணிப்பவர். இவரது கட்சியும் தலைவரும் இடைக்கால நிர்வாகம் என புலம்பித் திரிந்து மூக்குடைபட்டிருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஒன்பது பேரை வைத்திருந்தவர்கள் (எக்கச்சக்க கதைகளுடன் இரண்டு பேர் வெளியே நிற்பது வேறு கதை) எதையும் சாதிக்காமல், பத்திரிகை வியாபாரமும் மீன் வியாபாரமுமே நன்றாகச் செய்கிறார்கள். வவுனியா அகதிகளுக்காக ஒரு ஹர்த்தால் நடத்தக்கூட தயாராய் இல்லாதவர்கள், அரசாங்கத்தை எதிர்த்து ஒரு சொல்லுச் சொல்லி விட்டால், இடைக்கால நிர்வாகம் கிடைக்காமல் போய்விடுமோ எனப் பயப்படுபவர்கள், யுத்தத்துக்காக தொடர்ந்து வாக்களிப்பவர்கள் பத்திரிகையில் மட்டும் கூசாமல் விமர்சன பாவலா காட்டுகிறார்கள். என்னென்ன விடயங்களை எல்லாம் தமிழ் மக்களுக்கெதிராகச் செய்யமுடியுமோ அவ்வளவையும் பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் இருந்து செய்பவர், தனது செயற்பாடுகளை, கட்சியின் செயற்பாடுகளை மறந்து ஏனைபவர்களை தனது பத்திரிகையில் விமர்சிப்பதுதான் வேடிக்கையானது.

## வாழ்த்திக் கெடுப்பவர்கள்

வடபகுதி மக்கள் தென்பகுதிகளுக்குச் செல்வதற்கான தரைப் பாதை தடைப்பட்டிருப்பதால், அவர்கள் போக்குவரத்திற்கு கடலையும் ஆகாயத்தையுமே நம்பி இருக்கிறார்கள். அண்மையில் இதற்கான பயணக் கட்டணங்கள் திடீரென உயர்த்தப்பட்டது அவர்களுக்குப் பேரிடிதான். 300 ரூபாவாக இருந்த கப்பல் கட்டணம் 1000 ரூபாவாகவும், 1000ரூபாவாக இருந்த விமானக் கட்டணம் 3000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது. மக்கள் நலனில் அக்கறை கொண்ட எவரும் இச்செயலைக் கண்டிக்கவே செய்வர்.

வடபகுதியில் இருந்து அகதிகளாக வன்னிக்கு விரட்டப்பட்டவர்கள் எல்லாவற்றையும் இழந்து இப்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளார்கள். இவர்களின் நிலை அறிந்தும், இங்கு திரும்பி வருபவர்களை ஊக்குவிப்பதற்காகவும் கப்பல் கட்டணமின்றி இவர்கள் குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டு வருகின்றார்கள். இதற்கான செலவுகளை அரசின் புனர்வாழ்வுப் பகுதி ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இந்த அகதிகளிடமிருந்து 'பாஸ்' கட்டணமாக தனி ஆள் ஒருவருக்கு 200 ரூபாவும், வயதுக்கட்டுப்பாடு என்று வகைப்படுத்தப்பட்டவர்களிடமிருந்து 500 ரூபாவையும் புலிகள் அறவிடுகின்றனர். பணம் அறவிட்ட பின்னரே இவர்கள் வடபகுதிக்கு வர அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்த மக்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்தபோது, படகு கட்டணம், பாஸ் கட்டணம் எதுவுமின்றி இவர்களைப் புலிகள் வன்னிக்கு ஏற்றிச் சென்றதாக விதந்து பாராட்டியவர்களும் உண்டு.

## கொள்கைப் பற்று

அண்மையில் கொலைசெய்யப்பட்ட கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களின் கொலையை கண்டித்து. கூட்டணியின் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் அறிக்கைகள் விடுத்திருந்தார்கள். இதனை யார் செய்திருப்பார்கள்? என பத்திரிகையாளர்கள் துருவித் துருவி கேட்டபொழுதுங் கூட, "எமக்கு எத்தனையோ எதிரிகள், யாரும் செய்திருக்கலாம்" என மேல்மட்டம் கூறியதாம். மட்டக்களப்புச் சிங்கமோ முதலில் புலிகளை கண்டித்து அறிக்கை விட்டாராம். ஆனால், வானொலியில் அவ்வறிவிப்பு வந்ததும், "ஐயையோ நான் அப்படிச் சொல்லவில்லை, அது பிழையான தகவல்" என உடனேயே மறுப்பறிக்கை வெளியிட்டாராம். புலிகள் பேச்சுவார்த்தை நடாத்த வந்து. தமது தலைவரைக் கொன்றதையே, தம் வாயால் சொல்ல மறுத்தவர்கள் – அமிர்தலிங்கம் ஏதோ மாரடைப்பில் செத்தது போலக் கதை சொல்லிக் கொண்டிருப்பவர்கள், தங்கத்துரையின் கொலையை மாத்திரம் எப்படி பெயர் சொல்லிக் கண்டிப்பார்கள்? ஏதோ கடைசிக் காலம், புலிகளின் பேரை வாயால் உச்சரிக்காமலேயே வாழ்ந்துவிட்டுப் போய்விடுவதுதான் உத்தமம் என்பது தெரிந்த பெருந்தலைவர்கள் அவர்கள்! கூட இருந்தவனெல்லாம் கொல்லப்பட்டாலும், குண்டு தனக்கு வரும்வரை வாயே திறக்காது அரசியல் பிழைப்பு நடத்திக் கொள்ளும் கொள்கை உறுதி கூட்டணி போன்ற மூத்த தமிழ்க் கட்சிக்கல்லால் வேறு யாருக்கு வரும்?

## கில்லாடித் தமிழர்கள்!

முல்லைத்தீவில் கப்பல் கடத்தப்பட்டதுதான் தாமதம், யாழ்ப்பாணத்தில் எல்லாப் பொருட்களுமே பதுக்கப்பட்டு விட்டதாம். மண்ணெண்ணை தொடக்கம் பருப்பு வரை எல்லாவற்றிற்குமே தட்டுப்பாடாம். பிசினெஸ்காரரைப் பொறுத்தவரை தமிழன் சிங்களவன் வேறுபாடெல்லாம் இரண்டாம் பட்சம். யாழ்ப்பாணத்தில் பொருட்கள் பதுக்கல் ஒருபக்கம், இங்கே கொழும்பில் லொட்ஜ் முதலாளிகளின் பணம் பறிப்பு வித்தை பெருஞ்சாமர்த்தியம். லொட்ஜில் உள்ள தமிழர்களிடம் பணம் பறிப்பதற்காக, லொட்ஜ் முதலாளியே பொலீஸுக்கு முறைப்பாடு அனுப்புகிறார். பின்னர் அந்த லொட்ஜ் முதலாளியே தலையிட்டு, "ஒரு ஐம்பது முடியும், பிரச்சினை இல்லாமல் எடுத்து விடலாம்" என்பாராம். அதில் இவருக்கு 25, பொலீஸுக்கு 25. ஏஜென்ஸிக்காரர்கள் சும்மா இருப்பார்களா? பணம்வாங்கிய ஏஜென்ஸி அனுப்ப முடியாவிட்டால் உடனே பொலீஸுக்கு தகவல், அவன் புலியாம். பின்னர் அந்த ஏஜென்ஸியே தலையிட்டு விடுவித்தும் விடுகிறார். "அவங்களுக்கு ஒண்டுக்கு மேல் செலவாச்சுது..." என பின்னர் மேலும் காசு கொடுக்க வேண்டிய நிலை முன்னர் பணம் கொடுத்தவருக்கு. கப்பலில் சாமான் ஏற்ற வேண்டுமா? பாதுகாப்பு கிளியரன்ஸுக்கும் தமிழ் புரோக்கர்மார் இருக்கினம்.

மொத்தத்தில் தமிழனின் துன்பத்தில் உழைப்பதில் தமிழர்கள் கில்லாடிகள்.

---

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஒரு புதிய தொற்று நோய் வேகமாகப் பரவிவருகிறது. பாடசாலை, பல்கலைக்கழகம், அரச நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் எனப் பல இடங்களில் இந்நோய் வேகமாகப் பரவிவருகிறது. என்ன நோய் என்று கேட்கிறீர்களா? அதுதான் பாராட்டுநோய்.

இந்நோய் இரு நிலைகளில் வெளிப்பாடடைகின்றது. ஒன்று பத்திரிகை விளம்பர அறிவித்தல்கள் ஊடாக பாராட்டுதல்கள் நடைபெறுதல்-இது ஆரம்ப நிலை. மற்றது விழா எடுத்து, மலர் மாலை சூட்டி, நகரப் பிரமுகர்கள் எல்லோரும் சேர்ந்து 'உலகத்திலேயே மிகச் சிறந்த மனிதர் இவர்தான் (சிலவேளைகளில் யேசுநாதருக்கு ஒப்பானவர் கூட) என்று கூறி ஒருவரைப் பற்றி பாராட்டுவிழா நடத்துதல் - இது முற்றிய நிலை.

அதுசரி, பாராட்டுவதற்கான விடயம் என்ன என்று கேட்கிறீர்களா? அதற்குப் பெரிதாக ஒரு விடயமும் தேவையில்லை. மாணவராயிருந்தால், அவர் ஏதாவதொரு பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் சரி (அது ஆண்டு-2 தவணைப் பரீட்சையாகக் கூட இருக்கலாம்). பல்கலைக்கழகம், அரச நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களானால், அங்கு ஒருவருக்கு புதிதாக உயர் பதவி கிடைத்தால் சரி, ஏனைய விடயங்கள் மிகச் சுலபமாகவே முடிந்துவிடும்.

யாழ்ப்பாணத்தில் பாராட்டுப் பெறுபவர்கள் போல் பாராட்டுபவர்களுக்கும் குறைவேயில்லை. சிறுவர்கள் தொடக்கம் முதியோர் வரை, பற்றற்ற துறவிகள் தொடக்கம் கற்றறிந்த கல்விமான்கள்வரை எல்லோரும் பாராட்டுவதற்கு தயாராகவே இருக்கிறார்கள். வாரி வழங்க வர்த்தகர்கள் இருக்கிறார்கள். இதுதான் இன்றைய யாழ்ப்பாண பாராட்டு நிலை.

இதைவிட, யாழ்ப்பாணத்தில் சீவிக்கவே முடியாது என்று கொழும்பில் அடம்பிடித்துக்கொண்டு நின்று, அங்கு இந்தப் பாராட்டு விழாக்களை நடத்தும் 'முற்போக்கானவர்கள்' இருக்கிறார்கள். அவர்கள் வேறு வகை.

அதுசரி, இன்றைய யாழ்ப்பாணம் பாராட்டப்பட வேண்டிய நிலையிலா இருக்கிறது? ஒருகாலத்தில் இலங்கை முழுவதற்குமே வைத்தியர்களையும், பொறியியலர்களையும் உருவாக்கித் தந்த பெருமை படைத்த யாழ்ப்பாணத்தில் தற்போது இவர்களுக்குத்தான் பஞ்சம். வைத்தியர்கள்இல்லாத மருத்துவமனைகள், ஆசிரியர்கள் இல்லாத மருத்துவ பீடம், கூரையும் ஆசிரியரும் இல்லாத பாடசாலைகள், மீளக்குடியேற வந்து இன்னமும் வீதியிலே விழிபிதுங்கி நிற்கும் மக்கள்....இவையெல்லாவற்றிற்கும் காரணங்கள் கண்டுபிடித்துக் கூறும் அரச நிர்வாகிகள் நிறைந்ததே இன்றைய யாழ்ப்பாணம்.

கால்வைத்த இடமெல்லாம் கண்ணிவெடி, கண்படும் இடமெல்லாம் முள்வேலியும், பாழடைந்த கட்டடங்களும் இருபத்தோராம் நூற்றாண்டை மின்சாரமின்றிச் சந்திக்கப் போகும் பெருமை மிக்க ஒரே இனம் வட இலங்கைத் தமிழினமாகத்தான் இருக்கப் போகிறது.

ஒரு சமூகத்தில் பாராட்டு விழாக்கள் நடத்தக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். நடத்தலாம். ஆனால், பாராட்டு விழா பாராட்டு வர்த்தகமாகிப் போகிற நிலைதான் பரிதாபமானது. இன்று யாழ்ப்பாணத்தில் அது ஒரு நோயாகவே ஆகிவிட்டது.

அன்றைய யாழ்ப்பாணத்திலும் பாராட்டுவைபவங்கள் நடந்தன. பதவியிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்கள், அதிகாரிகளுக்கு அந்தந்த நிறுவனங்களிலேயே நடந்தன. சேவையை மதிக்கும் செயலாக இயல்பாக எந்த நிர்ப்பந்தமும் இன்றி நடந்தன. பாடசாலை ஆசிரியர்களின் பிரிவுபசாரத்தின் போது. கண்ணீர்மல்க விடைதரும் மாணவர்களையும், ஆசிரியர் குழாத்தையும் அங்கு கண்டோம்.

அன்றைய யாழ்ப்பாணத்தில் பதவியில் சேரும்போதோ, பதவியில்சேர்ந்த சில மாதங்களுக்குள்ளோ எவரும் பாராட்டப்பட்டதேயில்லை. குறிப்பாக, அரச ஊழியர்கள் தாம் பெறும் சம்பளத்திற்கு தமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வில்தான் செயற்பட்டனர். கடமையைச் சரிவரச் செய்யாதவர்கள் விமர்சிக்கப்பட்டனர்.




அனாமதேய துண்டுப்பிரசுரம் ஆனபோதும், எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி, அப்படியே மறுபிரசுரம் செய்திருக்கிறோம்.

அன்றும் சோதனைகளில் மாணவர்கள் சித்தியடைந்தார்கள். மாணவர்களை ஆசிரியர்களும் பெற்றோரும் வாழ்த்தி மகிழ்வித்தனர், ஊக்குவித்தனர். சற்றுக் குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்களும், சித்தியடையாத மாணவர்களும் மனம்நோகாத வகையில் பாராட்டினார்கள். சித்தியடைந்த மாணவர்களை, அவர்கள் பெற்ற புள்ளிகளை வரிசைப்படுத்தி ஏனைய மாணவர்களிலிருந்து பிரித்தெடுத்து பத்திரிகை விளம்பரம் செய்து பாராட்டவில்லை.

பயன்கருதாப் பணிசெய்த பெரியவர்கள் பலர் வாழ்ந்த நாடு இது. அவர்களில் பலர் தம் வாழ்நாளில் பாராட்டப்பட்டார்களா என்பது கேள்விக்குறி. தவிர, அவர்களில் பலர் பாராட்டுப் பெறுவதையே விரும்பவில்லை. அதனால் அவர்களால் அன்றைய சமூகத்தை நேர்மையுடனும் துணிவுடனும் விமர்சிக்க முடிந்தது.

போலி மனிதர்கள் காலத்துக்குக் காலம் ஆதிக்கம்பெற முயலும்போது, அவர்களைத் தோலுரித்துக் காட்டிய பாரம்பரியமும் யாழ்ப்பாணத்திற்கு உண்டு. அந்த வரிசையில் ஆறுமுக நாவலருக்கும் இடமுண்டு. 1872ல் அக்காலத்துப் போலி மனிதர்களைக் காரசாரமாகக் கண்டித்து, 'யாழ்ப்பாணத்துச் சமயநிலை' என்ற நூலை எழுதினார். போலி மனிதர்களை எப்படி அடையாளம் காண்பது என்பதுபற்றி அந்நூலின் இறுதியில் வரும் சில வாக்கியங்களை காலப்பொருத்தம் கருதி இங்கு தருகின்றேன்.

"....பூசனிக்காயெடுத்தவனை தோளிலே தெரியும் என்றாற்போல ஓர் உபாயஞ் சொல்வேன் கேளுங்கள். இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுதுங் கேட்கும் பொழுதும் வாய் புறுபுறுத்தலிலும், உதடு துடித்தலிலும், கண் சிவத்தலிலும், சரீரம் படபடத்தலிலும், இடையில் எழுந்து ஓட்டம் பிடித்தலிலும் அவர்களை அறிந்து கொள்ளலாம். விடாதேயுங்கள்!" (யாழ்ப்பாணச் சமயநிலை. பக். நநச)

ஆறுமுகநாவலரின் தேசாபிமானத்தையும் யாருக்கும் அஞ்சா துணிவையும் கீழ்வரும் வரிகள் புலப்படுத்தி நிற்கின்றன.

"....பொதுப்படப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னோம். திருந்த விருப்பமுடையவர் திருந்தட்டும். திருந்த விருப்பமில்லாதவர் தமக்குப் பயன்படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன்படலாமே என்றெண்ணி வாய்மூடிக் கொண்டிருக்கட்டும். நாங்கள் எப்படி நடக்கினும் நடப்போம், நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்பார்க்கு, நாம் எப்படிக் கண்டிப்பினுங் கண்டிப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்போம். பிறர் செய்யும் அநீதிகளைக் கண்டித்தற்கு நீர் யார்? கடவுளோ அரசரோ என்பார்க்கு, கடவுள் கட்டளைக்கும் மாறாகவே பிறர் செய்யும் அநீதிகளை, அக்கட்டளைக்கு அமைந்து கண்டித்தலாகிய நமது நீதியைக் கண்டித்தற்கு நீர் யாரோ சற்றே பேசும் என்போம். ஆகா! பல மனிதராலும் பகைக்கப்பட்டீர், இனிக் கெட்டீர் என்பார்க்கு, ஓகோ கடவுளுக்கஞ்சும் அச்சம் பெருகப் பெருக மனிதருக்கஞ்சும் அச்சம் குன்றிக் குன்றிவிடும் என்பதறியீர் போலும் என்போம். எவ்விதத்தாலும் வாயெடுக்க ஒட்டோம் ஒட்டோம்." (யாழ்ப்பாணச் சமயநிலை. பக்.நச)

இன்று நம்மிடையே நாவலர்கள் இல்லை. ஆனால் அவர் வளர்த்த தேசாபிமானம் உண்டு. அதைப் பேணுவதவசியம்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை மனங்குளிரப் பண்ணி நாமமும் குளிர்ந்து போகும் போக்கு எம்மைவிட்டு எப்போது மாறும்? ஏன் செய்கிறோம், எதற்கு செய்கிறோம் என்று பகுத்தாராயாது, எல்லோரும் செய்வதால் நாமும் செய்வோம் என்ற மந்தை மனப்பான்மை எப்போது எம்மிடமிருந்து நீங்கும்?

பாழடைந்த இன்றைய யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப பாராட்டு விழாக்கள் தேவையில்லை. பிரதிபலன் கருதாது மக்களுக்குப் பணிசெய்ய விழையும் நல்ல நிர்வாகிகளும், துறைவல்லுனர்களும், பகுத்தறிவுடன் செயற்படும் மக்களுமே தேவை.

படிப்பகம்

www.padippakam.com



# அவுஸ்திரேலிய தூதுவருடன் தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் றிற்சி (DAVID RITCHIE) யாழ் கச்சேரியில் 09.07.97 அன்று, யாழ் குடாநாட்டில் செயற்பட்டுவரும் EPRLF, EPDP, PLOTE ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து இங்குள்ள அரசியல் நிலவரங்களைக் கேட்டறிந்தார்.

அவுஸ்திரேலியாவில் வாழும் 60 ஆயிரம் இலங்கையர்களில் 30 ஆயிரம் பேர் வரை தமிழர்கள் என தெரிவித்த அவர், அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி உள்ளவர்களாக இருப்பதோடு, இலங்கை அரசியல் நிலவரங்களை அறிவதில் மிகவும் அக்கறை கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள உடனடிப் பிரச்சினை பற்றி அவர் கேட்டபோது, மனித உரிமைகள் பேணப்படுவது அவசியம், இதற்கு மனித உரிமை நிறுவனங்கள் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின்போது, எதிர்பார்த்ததை விடவும் இழப்புக்கள் மிகவும் குறைவாக இருந்தபோதும், இதன்பின்னர் சுமார் 600 பேர்வரை காணாமல் போயுள்ளார்கள்.

கிருஷாந்தி படுகொலை போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பொதுமக்களைப் பற்றி கவனத்தில் கொள்ளாமல் நடைபெற்றுவரும் தாக்குதல்களால் பல இடங்களில் மக்கள் பாதிப்படைகின்றார்கள். இவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகள் அவசியம் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் இங்குள்ள மக்களின் அத்தியாவசிய சேவைகளைப் பொறுத்தவரையில், போக்குவரத்து, மீன்பிடி, மின்சார விநியோகம், சுகாதாரம் போன்றவை சில மாதங்களுக்கு முன்பு இருந்த நிலையை விடவும் மேம்பட்டிருக்கின்றது. இன்னும் சில நடவடிக்கைகள் தேவை.

இந்த விடயங்களில் அரசாங்கம் அக்கறையெடுப்பதனால் மட்டும் இது முழுமையடைய முடியாது. மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணுவதோடு, அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைக்கும் வெளிப்படையான நடவடிக்கைகளை புலிகளும் நிறுத்த வேண்டும்.

குறிப்பாக தாளையடி, இளவாலை ஆகிய பகுதிகளில் போக்குவரத்துச் சபை பஸ்கள் மீது நடாத்தப்பட்ட குண்டுவீச்சு சம்பவங்கள், மன்னாரில் பயணிகள் கப்பல் எரிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களும் பொதுமக்களுக்கு இடர் ஏற்படுத்துபவையே. இதுபோன்ற நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் என தமிழ் கட்சிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இவை யாவும் தமிழ் மக்களுக்கு இன்றுள்ள உடனடிப்பிரச்சினைகள் ஆயினும், நியாயமான அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனவும், அதற்கு அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மக்கள் தமது உண்மையான விருப்பங்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கு ஏதுவாக மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு, நியாயமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு புலிகளை இணங்கச் செய்வதற்கும் வெளிநாடுகளின் அழுத்தம் அவசியமெனச் சுட்டப்பட்டது. வெளிநாடுகளில் புலிகளின் அலுவலகங்கள் செயற்பட்டு வருவதால் இது சாத்தியமெனவும் குறிப்பிடப்பட்டது. அரசியல் வேலைகளில் தமிழ்க் கட்சிகளுக்கு உள்ள தடைகள் குறித்தும் திரு.டேவிட் றிற்சி தமிழ்க் கட்சிகளிடம் கேட்டார்.

எங்களுடைய வேலைகளுக்குப் புலிகளே தடையாக இருப்பதாக தமிழ்க் கட்சிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சமீபத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் பருத்தித்துறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழ்க் கட்சிகளுடன் தொடர்பு கொள்பவர்கள் புலிகளால் தண்டிக்கப்படுவார்கள் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இன்னமும் இருக்கிறது.

இவற்றுக்கு மத்தியிலேயே எமது வேலைகளைச் செய்து வருகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கமும், நாம் இங்கு வருவதை முதலில் விரும்பவில்லை. ஆனாலும் பின்னர் இங்கு வருவதற்கு அனுமதித்துள்ள்து. இப்போதும் எமது பிரசுரங்கள் மற்றும் எமக்கு வேண்டியவற்றைக் கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்குப் பல்வேறு தடைகளையும் இடையூறுகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. இருப்பினும் நாம் எமது உரிமைகளுக்காக வாதாடி இவற்றை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக நிலைமை உள்ளது. ஆனால், புலிகள் எமது ஜனநாயக உரிமைகளை அங்கீகரிப்பதில்லை.

இங்கு மீளக்குடியேறும் மக்களுக்கும், புனர்நிர்மாணப் பணிகளுக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவ வேண்டும் என இந்தச் சந்திப்பின் போது வேண்டுகோள் விடப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி அமைச்சுக்கூடாக நிதி வழங்கப்படுவதாகவும், 20 ஆயிரம் யு.எஸ். டொலருக்கு உட்பட்ட தொகையில் மேற்கொள்ளப்படக்கூடிய திட்டங்களுக்கு UNDP CODINATION BODY ஊடாக உதவிவருவதாகவும் தெரிவித்தார். அத்துடன், தொழிநுட்பக் கல்லூரிக்கு உதவிகள் வழங்குவதோடு, தேசிய தொழிற்பயிற்சி சபைக்கு உபகரணங்கள் வழங்கியிருப்பதாகவும் ICRC போன்றவற்றுக்கூடாகவும் உதவிகள் வழங்கி வருவதாகவும், இன்னும் நிலைமைகளை அனுசரித்து சந்தர்ப்பம் வரும்போது உதவிகள் வழங்குவோம் என்றும் அவுஸ்திரேலிய தூதுவர் தெரிவித்தார்.

இறுதியாக, இங்கு நிலைமைகள் சீரடையும் வரை அவுஸ்திரேலியாவில் உள்ள அகதிகள் திருப்பியனுப்பப்படக் கூடாது எனவும் அவரிடம் வேண்டுகோள் விடப்பட்டது.

பரஸ்பரம் நன்றி தெரிவித்துக் கொண்டதோடு சந்திப்பு நிறைவெய்தியது. ஈ.பி.டி.பி. சார்பில் கே.வி.கே.ஜெகன், நிஷாந்தன், ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பில் ரி.றொபேட், கே.மோகன், புளொட் சார்பில் கிருபைராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

## திராய்கேணி கிராமத்தில் மூன்றாவது தடவையாக மர்மக் கொலை

இக்கிராமம் அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவில் உள்ளது. ஒருபகுதியில் கடலும், மறுபகுதியில் வயல் பரப்பும், குடியிருப்புமாக அமைந்துள்ளது. தற்சமயம் 150 குடும்பங்கள் வசிக்கின்றன. 300க்கு மேற்பட்டோர் காரைதீவு, திருக்கோயில், தம்பிலுவில் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இக்கிராமத்தில் பலவருடமாக வாழ்ந்து வந்த ஊர்த்தலைவர், திராய்கேணி கிரமத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்த மைலப்போடி (57வயது) 09.07.97 புதன்கிழமை இரவு 1.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இக்கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் முஸ்லிம் கிராமங்கள் ஆகும். இப்பகுதியில் திராய்கேணி தவிர வேறு தமிழ் கிராமங்கள் கிடையாது. சொல்லப்போனால், திராய்கேணி என்னும் தமிழ்க் கிராமம் இருப்பதற்குக் காரணமே படுகொலை செய்யப்பட்ட இக்கிராமத் தலைவர் மைலப்போடி ஆகும்.

திராய்கேணியைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட மர்மக் கொலைகள் பலதடவை நடந்துள்ளது. உதாரணமாக 1985,1986,1990, 1997களில் பல கொலைகள் நடந்துள்ளது. 90ம் ஆண்டு நடந்த வன்செயலின் காரணமாக 150க்கு மேற்பட்ட வீடுகள் உடைக்கப்பட்டு, உடைமைகள் சூறையாடப்பட்டு, 60க்கு மேற்பட்ட குழந்தைகள் பெரியோர் எல்லாம் மர்மமான முறையில் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். பலர் ஆதரவு தேடி ஏனைய தமிழ்க் கிராமங்களுக்கு தப்பியோடினர்.

இதேபோல் 85ம் ஆண்டும் பலர் வெட்டுப்பட்டு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கின்றவர்கள், இம்மக்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டனர். திராய்கேணி மக்களை இம்சைப்படுத்தும் குற்றவாளிகளை சட்டத்துக்கு முன் நிறுத்த சட்டம் ஒழுங்குப் பாதுகாவலர்கள் முன்வருவதில்லை.

குறிப்பாக, 09.07.97 அன்று மர்மமான முறையில் கொல்லப்பட்ட மைலப்போடி, கடந்த ஜூன் மாதமும் அவர் வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு, மயிரிழையில் உயிர்தப்பினார். இவர் சொந்த வீட்டில் இருந்தால் உயிருக்கு ஆபத்து வரும் என்று, இரவில் இக்கிராமத்திலுள்ள நல்லதம்பி லட்சுமியின் வீட்டில் பாதுகாப்புக்காக சென்று தூங்குவதுண்டு.



அவ்வீட்டிலேயே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொலையாளிகள், இனக்கலவரத்தைத் தூண்டும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் துப்பாக்கிகளை ஏந்தியிருந்ததாக ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருவருடத்துக்கு முன் மைலப்போடிக்கும் அயல் கிராமவாசிகளுக்கும் காணித்தகராறு ஏற்பட்டு, நீதிமன்றத்தில் விசாரணைகள் நடந்து வருகின்றன. அயல்கிராமவாசியான ஒரு பொலீஸாரே மைலப்போடியின் குறிப்பிடத்தகுந்த எதிரியாவார். இவரது படுகொலைக்கும் இக்காணிப் பிரச்சினைக்கும் தொடர்பு உண்டு என இக்கிராம மக்கள் கூறுகின்றனர்.

தகவல்:
இரா. துரைரத்தினம்
மட்டக்களப்பு

## செய்திகள்....சின்னச் செய்திகள்....சின்னச் செய்திகள்....சின்னச் செய்திகள்....சின்னச் செய்திகள்

### வீரபுரம் விளையாட்டுப் போட்டி

மே 4ந் திகதி செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் கீழ் வரும் பாவற்குளம், செட்டிகுளம், இலுப்பைக்குளம், முதலியார் குளம், வீரபுரம் கிராமங்களிலுள்ள உதைபந்தாட்டக் குழுக்கள் யாவும் ஒன்றுசேர்ந்து வீரபுரம் கிராமத்தில் உதைபந்தாட்ட நிகழ்ச்சியொன்றை நடத்தின.

கிராம மைதானம், சமாதான நீதவானும் முன்னாள் கிராம சேவையாளருமான விசாகப் பெருமாள் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பல்வேறு கிராமங்களிலிருந்து பெருவாரியான இளைஞர்களும், பொதுமக்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். பிரதேச செயலக விளையாட்டு அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் முன்னின்று போட்டியை நடத்தினர்.

செட்டிகுளம் பிரதேச ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பாளர் ஈஸ்வரன் அவர்களுடன் தொடர்பு கொண்டு வீரபுரம் விளையாட்டுக் கழகம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. போட்டியின் முடிவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பத்மநாபா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் உட்பட பல பரிசில்கள் வழங்கப்பட்டன. விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

### அடம்பன்குளம் முகாமில் அடாவடித்தனம்

செட்டிகுளம் அடம்பன்குளம் முகாமில் காமினி என்ற பெயருடைய ஒருவர், தான் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்ற தோரணையில் அங்குள்ள அகதி மக்களை அச்சுறுத்தியும் பயமுறுத்தியும் வருகிறார். இவர் புதிய கண்ணோட்டம் விற்கச் சென்ற எமது தோழர்களையும் வேவு பார்க்க முற்பட்டு பிரச்சினைகளை உருவாக்கினார்.

தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருக்கும் அகதிமுகாம்களில் இத்தகையோரின் தொல்லைகள் அதிகமாகவே இருக்கின்றன. முகாமிலுள்ள பெண்கள், இளைஞர்கள் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

### ஜூன் 10ந் திகதிச் சம்பவங்கள்

ஜூன் 10ந் திகதி புலிகள் தாண்டிக்குளத்தில் ஊடுருவித் தாக்கிய அன்று, செல்கள் விழுந்து 10க்கு மேற்பட்ட சிவிலியன்கள் பத்தினியார் மகிழங்குளம், சமயபுரம் ஆகிய பகுதிகளில் உயிரிழந்தனர். சமயபுரம், கணேசபுரம், பட்டாணிச் சூர் புளியங்குளம், பட்டணங் காத்தசோலை ஆகிய பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் கூமாங்குளம், கோவில் குளம் ஆகிய பகுதிகளில் தங்க வைக்கப்பட்டனர். பட்டாணிச் சூர் புளியங்குளத்து முஸ்லிம் மக்கள் கெக்கிராவ, மதவாச்சியிலுள்ள தமது உறவினர்களின் வீடுகளுக்கு கிடைத்ததை எடுத்துக்கொண்டு சாரிசாரியாக பயணப்பட்டனர்.

சமயபுரம், கணேசபுரம் பகுதிகளில் 150 பேர்வரை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் சிலமணி நேரங்களில் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். நாளாந்தம் பார்த்து நன்கு பரிச்சயமானவர்களே தம்மைக் கைதுசெய்ததாக மக்கள் குறிப்பிட்டனர்.

இதேபோல் உள்ளே நுழைந்த புலிகள், 'நீங்கள் என்ன இராணுவத்தினருக்கு அனுசரணையாக இருக்கிறீர்களா?'என்று கேட்டு பொதுமக்களைத் தாக்கியுள்ளனர். உரலுக்கு ஒருபக்கம் இடி, மத்தளத்துக்கு இருபக்கமும் இடி என மக்கள் தமது தலைவிதியை நொந்துகொள்கிறார்கள்.

வவுனியா நிருபர்

### யுத்தப் பேய் வரும் நாட்கள்

ரத்தவெறி கொண்டு
யுத்தப்பேய் நேற்றும் இறங்கிற்று
அவர்களும் இவர்களுமாய்
மனிதர் செத்துப் போயினர்
பேய்க்கு சந்தோஷம் மகா சந்தோஷம்!
குருதியாற்றில் கும்மாளமடித்தது
சாவுக் கணக்கில்
அவர்களின் இவர்களும்
இவர்களின் அவர்களும்
கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டனர்.
யுத்தத்தில் மிக மிக அதிகமாய்
செத்துப் போகிறவர்கள் யார்?
பாதிக்கப்படாத பாதுகாப்பு நிறைந்த
சகல வசதிகளுங் கொண்ட
'பொது' மக்களது சந்தோஷத்துக்கான
மிக முக்கிய கேள்வி இது.
இக்கேள்விக்கான விடையை
அவர்களின் அவைகளும் (பத்திரிகை, வானொலி)
இவர்களின் இவைகளும் தரும்
எல்லோரும் கணக்கற்ற சாவில் இன்புற்றிருப்பர்.
இங்கு நகரை
அம்புலன்ஸ் ஒலி நிரப்பும்
வைத்தியசாலைகளை சீருடை நோயாளிகள்
நிரப்புவர்
சவப்பெட்டிகள் விற்றுத் தீர்ந்திருக்கும்
அங்கு, படம் வரும் பதவி வரும்
இன்னுமின்னும் ஆட்களும் வருவர்
மொத்தத்தில் பேய் வந்தால்
எல்லாமும் வரும்
ஆக, தீர்வோ சமாதானமோ என்கிற
மிகச்சிறிய விடயங்கள்தான் வராது.


– யுத்த சன்யாசி,
திருமலை.

படிப்பகம்

www.padippakam.com







# கடல் வழிப் பாதையா? தரை வழிப் பாதையா? இல்லை மூன்றாம் தரப்புடன் பேச்சுவார்த்தையா?

சாணக்கியன்

யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துப் பாதையை திறக்கப் போகின்றோம்; ஒரு மாதத்தில் திறந்து விடுவோம்; இரண்டு மாதத்தில் திறந்து விடுவோம் என அரசாங்கம் அறிக்கைகள் விடுத்தது. யாழ்ப்பாணம்-கண்டி வீதியைத் திறப்பதற்காக 13ம் திகதி மே மாதம் 'ஜயசிக்குறு' என்ற பெயரில் இராணுவத் தாக்குதலும் ஆரம்பமானது.

இரண்டு மாதம் முடிந்துவிட்ட நிலையில் இன்னும் புளியங்குளத்தை அண்மிக்கும் நிலையிலேயே இருக்கின்றோம் என்கின்றார்கள். ஆனால் 10 கிலோமீட்டர் தூரமுள்ள இவ்விடத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, இராணுவம் பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளது. ஏறத்தாழ 400 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், அதற்கும் மேலானோர் காயமடைந்துமுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையை முறியடிப்பதற்கு புலிகள் தொடுத்த பதில் தாக்குதலில் ஏறத்தாழ இதேயளவு இழப்புக்களும் காயங்களும் புலிகளுக்கும் ஏற்பட்டுள்ளன.

இந்த யுத்தத்தால் வன்னியில் இருக்கக்கூடிய பொதுமக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளதுடன், நாளாந்தம் 50–100 என வள்ளங்களில் யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருக்கிறார்கள். இதேபோல் ஆயிரக்கணக்கான மக்கள் மன்னாருக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

இதுவரை மன்னார் வந்த மக்களும் கப்பல் மூலம் யாழ் அனுப்பப்பட்டு வந்தனர். ஆனால் கடந்த 11ந் திகதி அகதிகளை ஏற்றிச்செல்லும் எம்.வி.மிஷன் என்னும் கப்பல் மன்னார் கடலில் வைத்து புலிகளால் எரிக்கப்பட்டதுடன், அதில் கடமையாற்றிய எட்டு சிப்பந்திகளும் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

இதில் இந்தோனேசியாவைச் சேர்ந்த கப்பல் கப்டனும், இன்னொரு பொறியியலாளரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் இன்னும் அவர்களின் தடுப்புக் காவலில் உள்ளார்கள்.

மக்கள் வன்னியில் இருந்து வெளியேறுவதைத் தடுப்பதும், கப்பல் போக்குவரத்தைச் சீர்குலைப்பதுமே புலிகளின் நோக்கமாக இருக்க முடியும்.

வன்னியைப் பொறுத்த வரையில் பாரிய இடம்பெயர்வுகள் ஏற்பட்டுள்ளதுடன், அங்கு உணவுப்பற்றாக்குறையும், மருத்துவப் பற்றாக்குறையும் மிகவும் மோசமாக உள்ளது. ஆகவே இவை எங்கு கிடைக்குமோ அங்கு நோக்கி மக்கள் இடம்பெயர்வது தவிர்க்க முடியாது.

இதேசமயம், யாழ்ப்பாணத்துக்கு உணவு ஏற்றிச் சென்ற 'மொரங் பொங்' கொரியாக் கப்பலொன்று உணவு வகைகளை இறக்கிவிட்டு வரும்பொழுது, முல்லைத்தீவுக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் வைத்து புலிகளால் கடத்தப்பட்டு 'சாலை' என்னும் இடத்தில் நங்கூரம் பாய்ச்சப்பட்டுள்ளது.

> அரசுக்கு இருக்கக்கூடிய இரு மாற்று வழிகள், ஒன்று இந்திய அரசிடம் உதவி கேட்பது. அடுத்தது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது. இதைச் சாத்தியமாக்குவது அரசின் கையிலும், புலிகளின் கைகளிலுமே உள்ளது. இவை எதுவும் நடைபெறாவிடில், சமாதானம் என்பது கானல் நீராகவும், யுத்தம் என்பது முடிவில்லாததுமாகவே இருக்கும்.

இதில், சிப்பந்திகளாக வேலை செய்த 38 கொரிய நாட்டவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் தப்பிஓடும் போது சுட்டுக் கொன்றதாக புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் உண்மை அதுவல்ல. வெளிநாட்டவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டால், எந்தக் கப்பலும் இலங்கையின் வடபகுதிக்கு சேவையிலீடுபட வரமாட்டார்கள் என்பதற்காகவே ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவர்கள் அப்படிச் செய்தது சரியா பிழையா என்பதற்கப்பால் கடல் போக்குவரத்தை கணிசமானளவு சீர்குலைத்துள்ளார்கள் என்பதை நம்பலாம்.

வடபகுதிக்கான கடல் போக்குவரத்து சீர்குலையும் பட்சத்தில் அங்கிருக்கக்கூடிய ஐந்து லட்சம் மக்களின் உணவு, மருத்துவம் போன்றவற்றில் பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன், ஏறத்தாழ 40,000 இராணுவத்தினருக்கான பொருட்களை விநியோகிப்பதிலும் தாமதங்கள் ஏற்படும். இது இராணுவத்தினருக்கும் சோர்வை ஏற்படுத்தும் என்பதுடன், மக்களுக்கும் சொல்லொணாத் துன்பங்களை ஏற்படுத்தும்.

போக்குவரத்துக் கப்பலோ, உணவுக் கப்பலோ போவதற்கு அரசாங்கம் ICRC யின் துணையை நாடலாம். அதனை புலிகள் எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்வார்கள் என்பது கேள்விக்குறியே.

சகல கப்பல்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் அளவில் சிறீலங்கா கடற்படையுமில்லை. இந்நிலையில் வெளிநாட்டுக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதில் பல சிரமங்கள் ஏற்படும் என்பதனையும் எதிர்பார்க்கலாம்.

இதற்கு மாற்றீடு, எவ்வளவு இராணுவத்தினர் இறந்தாலும் பரவாயில்லை, தரைப்பாதையை திறப்பது என்பதாகவே இருக்க முடியும். ஆனால், 12 மைல் நீளப் பாதையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரண்டு மாதம் எடுத்தவர்கள், மீதியாக உள்ள 35 மைல் தூரத்தை அடைய இன்னும் எத்தனை மாதங்கள் பிடிக்கும் என்பது கேள்விக்குரியதே.

இந்நிலையில் அரசுக்கு இருக்கக்கூடிய மாற்று வழிகள் என்ன என்பதே முக்கிய கேள்வியாகும். பிரபாகரனைப் பொறுத்தவரை, பட்டினியால் மக்கள் செத்தாலும் பரவாயில்லை, போராட்டம் தொடர வேண்டும் என்பதே அவரது விருப்பம். போராட்டம் தொடரும் பட்சத்தில், அரசாங்கம் பலவீனமாகிப் போய்விடலாம் என பிரபாகரன் யோசிக்கலாம்.

அரசைப் பொறுத்தவரை, பிரபாகரனுடன் பேசுவதாய் இருந்தாலும், அவர்கள் பலவீனமாகிப் போனதன் பின்னர் பேசுவதே சிலாக்கியமானது என்பது அவர்கள் அபிப்பிராயம்.

அரசு பல இழப்புக்களைச் சந்தித்த போதிலும், ஒட்டுமொத்தமான யுத்தத்தில் இதுவரை வெற்றி அடைந்தே வந்துள்ளது. ஆனால், இன்றுள்ள சூழ்நிலையில், ஒன்றில் கடல் போக்குவரத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும், இல்லையேல் தரை வழிப் பாதையை திறக்க வேண்டும்.

இல்லாவிடில், அரசாங்கத்தின் முழு இராணுவ தந்திரோபாயமும் சீர்குலைந்துவிடும் என்பதுடன், ஜனாதிபதி மேல் சிங்கள மக்களுக்கு நம்பிக்கையும் அற்றுப் போய்விடும்.

மேற்கண்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தவறும் பட்சத்தில் அரசுக்கு இருக்கக்கூடிய ஏனைய இரு மாற்று வழிகள், ஒன்று இந்திய அரசிடம் உதவி கேட்பது. இது குஜ்ரால் அரசில் சாத்தியமில்லாத விடயம்.

அடுத்தது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது. இதைச் சாத்தியமாக்குவது அரசின் கையிலும், புலிகளின் கைகளிலுமே உள்ளது. இவை எதுவும் நடைபெறாவிடில், சமாதானம் என்பது கானல் நீராகவும், யுத்தம் என்பது முடிவில்லாததுமாகவே இருக்கும்.

---



# பிராந்திய குழு முறையே முஸ்லிம் பிரச்சினைக்கு தீர்வு

– முஸ்லிம் காங்கிரஸ்

பாராளுமன்ற குழுக்களின் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் செயலாளருமான ரவூப் ஹக்கீம் அவர்கள் கொழும்பு முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இனப்பிரச்சினையும் தீர்வுத்திட்டமும் பற்றிப் பேசும்பொழுது, "டொனமூர் அரசியலமைப்பின் கீழ் இருந்த நிறைவேற்றுக் குழு முறையே பிராந்திய சபைகளில் செயற்பட இருப்பதால், ஒவ்வொரு கட்சியும் பிராந்திய அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெறும் நிலையும், உறுப்பினர் எல்லோரும் ஒவ்வொரு நிறைவேற்றுக் குழுவில் அங்கத்துவம் பெறும் நிலையும் ஏற்படும். இதனால் சகல மக்களின் நலன்களும் உறுதிப்படுத்தக் கூடியவாறு இருக்கும். எனவே பிராந்திய ரீதியில் அதிகாரம் பரவலாக்கப்படும் பட்சத்தில், ஓர் பிராந்தியத்தின் பெரும்பான்மையாக வாழும் மக்களின் அதிகாரம் மேலோங்குவதால் அங்கு வாழும் சிறுபான்மையினரின் நலன்கள் பாதிக்கப்படும் என்ற அச்சம் அர்த்தமற்றதாகும்." என்று கூறினார்.

மேலும் தொடர்ந்து பேசும்பொழுது, "முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய அதிகார அலகு பற்றியே முஸ்லிம் காங்கிரஸ் பேசிவருகின்றது. இதற்கிணங்க தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தென்கிழக்குப் பிராந்திய அலகு தொடர்பாக ஓர் இணக்கப்பாடும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாட்டில் சிதறி வாழும் முஸ்லிம்கள் தொடர்பாகவும் பல கோணங்களில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்."

ஹக்கீமின் முதலாவது கூற்றின்படி, உருவாக இருக்கும் நிறைவேற்றுக் குழு முறையானது அனைத்துப் பிராந்தியங்களில் இருக்கும் சிறுபான்மை மக்களின் நலன்களை உத்தரவாதப்படுத்துகின்றது எனின், தனியான தென்கிழக்கு மாகாண சபைக் கோரிக்கையின் அர்த்தமென்ன? அவரது முதலாவது கூற்றானது இரண்டாவது கூற்றை அர்த்தமற்றதாக்கி விட்டது. இது ஹக்கீமின் குழப்பமா? இல்லையேல் முஸ்லிம் காங்கிரஸின் குழப்பமா?

---

இரங்கல்

# அருணாசலம் தங்கத்துரை

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் நீண்டகால அங்கத்தவரும், திருமலை பாராளுமன்ற உறுப்பினருமான திரு தங்கத்துரை அவர்களின் மறைவையிட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



ஆயுதமெடுத்துப் போராடுபவர்கள் மாத்திரம்தான் போராளிகள், மற்றைய எல்லோரும் துரோகிகள் என்ற சித்தாந்தத்தினைக் கொண்டிருக்கும் கூட்டத்தினர் இதுவரை அரிய பல உயிர்களைக் காவு கொண்டு விட்டனர். தங்கத்துரையைக் கொலைசெய்யச் சென்றவர்கள், பாடசாலை அதிபர்களையும் அங்கிருந்த ஏனைய பொதுமக்களையும் கொன்று குவித்ததுடன் பலரைக் காயப்படுத்தியுமுள்ளனர்.

ஒருகாலத்தில், திருமலை என்னும்போது தங்கத்துரை அவர்களின் பெயரும் ஞாபகத்திற்கு வரும். தமிழர் தேசியத்தைக் கட்டியெழுப்பியதில் தங்கத்துரை அவாகளுக்கு ஒரு பாத்திரம் உண்டு. திட்டமிட்ட குடியேற்றம், கலாசார ஆக்கிரமிப்புகளுக்கெதிராக போராடி சிறையிருந்தவர்.

துரதிர்ஷ்டவசமாக, உடல் மீதியின்றி அழித்தொழிக்கும் ஜனநாயக விரோதப் போக்கிற்கு அவரும் பலியாகி விட்டார்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு கௌரவமான தீர்வைக் காணவும், சமாதானத்திற்காகவும் தனது இறுதி நாட்களில் மனப்பூர்வமாக உழைத்துக் கொண்டிருந்தார்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், கட்சிக்கும், அவருடன் அந்தப் படுகொலைச் சம்பவத்தில் மரித்துப் போன அதிபர்கள் மற்றும் நண்பர்களின் குடும்பங்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்